Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 20 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 08 வெள்ளிக்கிழமை (22.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 234


## சட்டம் ஒழுங்கு சீர்குலைவு; தடுத்து நிறுத்த கோரிக்கை
### வடக்கு முதல்வருக்கு அவசர கடிதம்



பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக மாகாண சபைக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளது என்பதற்காக அறிக்கைகளை மட்டும் வெளியிட்டுவிட்டு இருக்க முடியாது. அதனைச் செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் நேற்றைய அமர்வின்பின் முதலமைச்சருக்கு கையளித்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 19.05.2015 ஆம் திகதிய அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது, யாழ். மாவட்டத்தில் அண்மையில் 19 ஆம் பக்கம் பார்க்க

# அரசு மீது அதிருப்தி
## நான்கு அமைச்சர்கள் இராஜினாமா



(கொழும்பு)

தேசிய அரசின் மீது அதிருப்தியடைந்த நான்கு அமைச்சர்கள் நேற்று திடீர் இராஜினாமாச் செய்துள்ளனர்.

தேசிய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சர்களாக கடமையாற்றிய டிலான் பெரேரா, பவித்ரா வன்னியாரச்சி, சி.பி.ரத்னாயக்க மற்றும் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோரே நேற்று வியாழக்கிழமை தமது அமைச்சுப் பதவிகளை திடீரென இராஜினாமா செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பதவி விலகிய அமைச்சர்கள் நால்வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிப்பதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படாத காரணத்தினால் தாங்கள் பதவி விலக தீர்மானித்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் கார 19 ஆம் பக்கம் பார்க்க

## கலகம் செய்தால் துப்பாக்கிச்சூடு
### பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றங்களின் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்யும் வகையில் கலகம் செய்பவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்வதற்கு பொலிசாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. என்று கூறி ஊர்காவற்றுறை நீதிமன்றம் முன்பாக நேற்று காலை போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கே பொலிசார் எச்சரித்துள்ளனர். நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதி தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து நீதிமன்றங்களுக்கு முன்பாக போராட்டம் நடாத்துபவர்கள் நீதித் துறைக்கு இடையூறு விளைவிப்பவர்களை துப்பாக்கியால் சுட்டு கலைப்பதற்கு தமக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். புங்குடுதீவு மாணவிக்கு நீதி கோரி நேற்றுக்காலை 9 மணிக்கு ஊர்காவற்துறை நெருஞ்சி முனையில் இருந்து புறப்பட்ட பேரணி ஒன்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தைச்சென்றடைந்து நீதிமன்றம் முன்பாக போராட்டம் நடாத்தினாரகள். அதனை அடுத்தே பொலிசார் எச்சரித்தனர்.

பொலிசாரின் எச்சரிக்கையை அடுத்து போராட்டக்காரர்கள் 19 ஆம் பக்கம் பார்க்க

## ரகளை புரிந்தவர்கள் அநுராதபுரம் சிறைச்சாலையில்

யாழ்.நீதிமன்ற வளாகப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட 130 பேரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தி சேதங்களை விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 130 சந்தேகநபர்களும், நேற்று மூன்று குழுக்களாக யாழ்.நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

இவர்கள் மீது நீதிமன்றக் கட்டடத்தை தாக்கி சேதம் விளைவித்தமை, அங்கிருந்த வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை, பொலிஸார் மற்றும் பாதுகாவலரகளைத் தாக்கி காயம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இதையடுத்து, குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், 47 பேரை வரும் ஜூன் 1ஆம் திகதி வரையிலும், 43 பேரை எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி வரையிலும், 40 19 ஆம் பக்கம் பார்க்க

## சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் கூடியவர்கள் நீதிமன்ற கட்டட கண்ணாடிகளை கல்லெறிந்து உடைத்த மற்றும் வளாகத்திலிருந்த வாகனங்களை சேதமாக்கிய சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடமாகாண நீதிமன்றங்களில் ஆஜராகும் சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது. 19 ஆம் பக்கம் பார்க்க

## சுவிஸ் பிரஜைக்கும் விளக்கமறியல்

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பாகக் வெள்ளவத்தையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட சுவிஸ் நாட்டவரான சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்கு இவர் அழைத்து வரப்பட்டார்.

இவர் மீதான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## "மணல் பொதி" இது விக்கியின் திட்டம்

யாழ். மாவட்டத்தின் கட்டடத் தேவைக்கான மணலை வழங்குவதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மணலை பொதி செய்து விற்பனை செய்வது சம்பந்தமாக கலந்தாலோசித்து வருகிறார் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். வடமாகாண சபையின் 28 ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள மாகாணசபை அலுவலகத்தில் பிரதி அவைத் தலைவரர் அன்ரனி ஜெகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

உறுப்பினர் பரஞ்சோதியினால் 19 ஆம் பக்கம் பார்க்க

## முடங்கியது வவுனியா



புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தும், இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கக் கோரியும், வவுனியா மாவட்டத்தில் நேற்று முழுமையான கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் போராட்டத்தினால், வவுனியா நகரம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடைகள் முற்றாக அடைக்கப்பட்டதுடன், போக்குவரத்து சேவைகளும் முடங்கின.

பாடசாலைகளும், அரச தனியார்.செய 19 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
பல்கலைக்கழகஅனுமதி 2014/2015
உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

# மொழிபெயர்ப்புக் கற்கைநெறி

மேற்படி நான்கு வருடபட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 19.06.2015 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொதுநிபந்தனைகள்**

**அனுமதிக்கானதகைமைகள்**

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவுசெய்வதற்குவிரும்பும் விண்ணப்பதாரிகள் 2014 ஆம் ஆண்டுநடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2014/2015 கைநூல் 8.16இற்கு அமைய தகுதிபெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்கு (Aptitude Test) தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளமாதிரிவிண்ணப்பப் படிவத்தை A-4தாளில் தயாரித்தோஅல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது **www.jfn.ac.lk** என்றயாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலிருந்துதரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படிதகுதிகாண் பரீட்சைக்கானவிண்ணப்பத்துடன் ரூபா 150 ஐ ஏதாவதொருமக்கள் வங்கிக் கிளையில்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளை,கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்றபற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2014 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லதுபெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரியசத்தியக் கடதாசிசமர்ப்பிக்கப்பட்டுஉறுதிசெய்யப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் சுய விலாசம் இடப்பட்டமுத்திரைஒட்டப்பட்ட 2310 செ.மீஅளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்டவிண்ணப்பங்கள் யாவும் 19.06.2015 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக் குறைந்ததகைமையை கொண்டிராததும், பணம் செலுத்தியபற்றுச் சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்பமுடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பிரவேசஅனுமதித் தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியதொலைபேசிஎண் 021 222 6714.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

01.06.2015

University of Jaffna,Srilanka

Faculty of Arts

University Admission -2014/2015

**Bachelor of Translation Studies**

Application for Aptitude Test

1. Name in full (Tamil and English)
2. The Name denoted by initial
3. National Identy Card No
4. Permanent address (In English)
5. District
6. Telephone No    email address
7. Results of G.C.E(A/L) Examination 2014

Index No    Z score    Generaal Test marks

| Subject | Grade | Medium | District |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

8. Name of parents/Guardian

Address (In English)

9. Documents to be submitted

1. Receipt of paid amount
2. Certified photo copy of the G.C.E(A/L) sheet (including Z score and District)
3. Affidavit in support of any change in names appearing in different documents if any


I certify that the above particulars submitted by me are true and accurate.

..........................    ..............................


Date (c/3863) Signature of applicant

# நண்பர்களின் போர்

## ஒரு நாள் ஆட்டம் இன்று



கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்



முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி

(முள்ளியவளை)

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற ஒரு நாள் போட்டி இன்று முல்லைத்தீவு முள்ளியவை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்குமிடையில் இடம்பெறும் நண்பர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தொடர்ந்து நடைபெறும் ஒரு நாள் ஆட்டம் இன்று காலை 9.00 மணிக்கு முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்றாவது ஆண்டாக நடைபெறவுள்ள இப்போட்டியில் முதலிரு போட்டிகளிலும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிவாகை சூடி முன்னிலை பெற்றுள்ளது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி அணியின் செயற்பாடு அமையும் அதேவேளை, முதல் வெற்றியை சொந்த மைதானத்தில் பெற்றுக் கொள்ளவும் அது முனைப்புடன் களத்தில் செயற்படும் என அதன் ஆதரவாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்யும் முனைப் புடன் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி செயற்படும் என அதன் ஆதரவாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த வகையில் இப்போட்டி மிகுந்த பரபரப்பு மிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போட்டி நிகழ்வு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## மாணவியின் படுகொலையைக் கண்டித்து நுண்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(சுன்னாகம்)

புங்குடுதீவில் கடந்த 13ஆம் திகதி வன்புணர்வுக்குட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து மருதனார்மடம் நுண்கலைப்பீட மாணவர்களும் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடாத்தியிருந்தனர்.

மருதனார்மடம் சந்தியில் கறுப்புக் கொடிகள், தோரணங்களைத் தொங்கவிட்டு சோக கீதம் இசைக்கப்பட்ட பின்னர் அங்கு கூடிய நுண்கலைப்பீட மாணவ, மாணவிகள் ஊர்வலமாகச் சென்றிருந் தனர்.

ஊர்வலத்தில் மாணவியின் படத்தினைத் தாங்கியவாறும், கறுப்புக் கொடிகளை அணிந்தவாறும் கோசங்களை எழுப்பியவாறும் சென்றிருந்தனர். "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்", காமுகர்களிற்கு மரண தண்டனை வழங்கு", இந்திய அரசே திரும்பிப்பார் போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரங்கள் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (06)

## வைகாசிப்பெருவிழா


(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம வைகாசிப் பெருவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நல்லை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையையும், கிளிநொச்சி உருத்திரபுரம் மகாதேவா ஆச்சிரம சுவாமிகள் ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள் வாழ்த்துரையையும் சுவேந்திரா ஐக்கிரத சைதன்ய சுவாமிகள் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் மலையக (அப்புதளைய், கொணமுட்டாவ) ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் தோட்டி (லாகல) ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஆகியவற்றின் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் மனனப் போட்டியும் ஸ்ரீ சாரதா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சிறப்பு கலை நிகழ்வுகளும் நடைபெற வுள்ளன. (18)

# தண்டனைகள் அதிகரித்தால் தான் தவறுகளைத் தடுத்து நிறுத்த முடியும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



தண்டனைகள் அதிகரிக்கப்படும் போதுதான் தவறுகளை தடுத்து நிறுத்த முடியும். தற்போது குடா நாட்டினது சமூக பிறழ்வுகளுக்கு காரணம் அதிக பட்ச தண்டனைகள் வழங்கப்படாமையும், பாதுகாப்பு துறையினரது பக்கச்சார்பான செயற்பாடுகளும், சட்டத்திலுள்ள ஓட்டைகளும் தான் காரணம். புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலைக்கு காரணமானவர்களை சட்டத்தினூடாக கடுமையாக தண்டிப்பதனூடாகவே எதிர்காலத்தில் குடா நாட்டினது பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் சமூக விரோத செயற்பாடுகளைகளை யெடுப்பதற்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு ஈழ.மக்கள் ஜனநாயக கட்சி எந்நேரமும் தயாராகவே உள்ளது. என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ.மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தனது ஊடக செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலை தான் குடாநாட்டின் சமூக பிறழ்வுகளிலீடுபடுபவர்களின் முற்றுப்புள்ளியாக அமைய வேண்டும். அத்தகைய செயலைச் செய்த காமுகர்களை விரைவாக தண்டனைக்குட்படுத்தி சமூகத்திலிருந்து அகற்றிவிடவேண்டும். அதற்காக அனைத்து ஆதரவுகளையும் பாதுகாப்பு தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதற்கு எமது கட்சி தயாராக உள்ளது.

நீண்ட கால யுத்தத்திற்குப் பின்பான காலத்தில் குடாநாட்டு மக்களின் வாழ்வியலில் பல பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் எந்தவொரு பிரச்சினைகளும் நிரந்தரமாக தீர்க்கப்படவில்லை என்ற உண்மை வலுவாக உணரப்படுகின்றது.

தற்போது எமது இளைஞர்களின் நடத்தை தொடர்பான விடயங்கள் பல்வேறு சிக்கல்களை உருவாக்கி வருகின்றது. யுத்தம் அழித்த பூமியில் விதிவசத்தால் திட்டமிடப்பட்ட வகையிலும் சமூகப் பிறழ்வுசார் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இளைஞர்களிடையே இயல்பாகிப்போன மதுப்பாவனை, போதைப் பொருள் பாவனை, புகைத்தல் என்பன பலரது குடும்ப கௌரவங்களை மாற்றியமைக்கின்றன. இதன் காரணமாக சமூகவிரோத செயல்கள் மலிந்து வருகின்றன.

வெளிநாட்டுப் பணம் ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்ட புதிய சமூக உருவாக்கத்தின் பயனாக பொறுப்பற்ற செயல்கள் பலருக்கு எத்தனையோ துன்பங்களை தோற்றுவிக்கின்றது.

இதன் வெளிப்பாடுகள் தான் இன்று புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வக்கிரப் படுகொலை.

பெண்களுக்கான பாதுகாப்பு என்பது தற்போது குடாநாட்டில் கேள்விக்குறியான விடயமாக தொடர்கின்றது.

கடந்த காலத்தில் பெண்களுக்கான பாதுகாப்பை பொறுப்பேற்ற சமூகம் தற்போது எது நடந்தாலும் நமக்கு என்ன? என்ற மௌனித்திருக்கும் நிலைதான் இத்தகைய விரோத செயல்களைத் தூண்டும் சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.

இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த தமிழினத்திடம் வக்கிர எண்ணங்கள் களையப்பட்டு ஒற்றுமையும், சகோதரத்துவமும் வளர்க்கப்பட வேண்டும். இதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

சமூக கலாசாரங்கள் பேணப்பட வேண்டும். இதனூடாகவே தமிழ் மக்களின் வாழ்வியலில் வன்முறையற்ற கலாசாரங்களை உருவாக்கிக்கொள்ள முடியும்.

வித்தியா என்ற மாணவியின் கொடூர படுகொலை எல்லோரது மனங்களையும் பாதித்துள்ளது. இது எமது சமூக நீதியையும் சமூகப் பொறுப்பையும் நிலை நாட்ட நாம் அனைவரும் அழைப்பு விடுத்திருப்பதாக அமைந்துள்ளது. வித்தியாவின் மரணமே சமூகவிரோ தத்தின் கடைசி அத்தியாயமாக இருக்கட்டும் எனவே நாம் பேதங்களை மறந்து ஒன்று திரண்டு ஒருமித்து குரல் கொடுப்பது காலத்தின் கட்டாயமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொண்டையில் உணவு சிக்கி ஒருவர் பலி

உணவு தொண்டையில் சிக்கி துன்னாலை அல்லையம்பதி கிராமத்தில் சுதர்சன் ஜெகதா (வயது 38) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயார் இறந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது, உணவு உட்கொள்ளும் போது உணவு தொண்டைக்குள் சிக்கியதில் இவர் இறந்துள்ளார். இவரை உடனடியாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு. பிரேத பரிசோதனை மேற்கொண்ட கரவெட்டி மரண விசாரணை அதிகாரி உணவு தொண்டையில் சிக்கியே மரணமானார் என்பதை உறுதி செய்தார். சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (18)

# "யாழ்ப்பாண நினைவுகள்" நூல் அறிமுக விழா

(வவுனியா)

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் - பாகம் 01 நூல் அறிமுக விழா வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார சமூக சேவைகள் சிறுவர் நன்னடத்தை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபையின் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, இ.இந்திரராஜா, எம்.பி.நட்ராஜ், வவுனியா நகர பிரதேச செயலாளர் கா.உதயராசா, ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், செந்தில்நாதன் நற்பணி மன்றத் தலைவர் செ.மயூரன், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுக உரையை இன்தமிழ் இனியன் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் பண்பாட்டு அலுவலர் செல்லத்துரை சிறிநிவாசன் நிகழ்த்தவுள்ளார்.

ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரனும், நன்றியுரையை தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் செல்வராசா சந்திரகுமார் (கண்ணன்) நிகழ்த்தவுள்ளார்.

# வெளிவாரி பட்டதாரி கற்கை நெறி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கலைமாணி சாதாரண வெளி-வாரிப் பட்டதாரி கற்கைநெறி - 2015 கல்வியாண்டுக்கு பேராதனை பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புதிய பாடத்திட்டத்தின் கீழ் கலைமாணி சாதாரண பட்டதாரி கற்கைநெறி தொடர்பாக பதிவு செய்வதற்கான தகைமையுள்ள விண்-ணப்பதாரிகளிடமிருந்து 2015 யூன் மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென பேராதனை தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. ..

கற்கைநெறி பதிவு செய்தல் தொடர்பாக மேலதிக விபரங்களை பெறுவதற்காக www.pdn.a.c.lk/cdce என்ற இணையதளத்திலும் அல்லது 0812392218 / 0812392222 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும்

பின்வரும் தகைமைகளையுடையவர்களான உயர்தரத்தில் ஒரே அமர்வில் மூன்று சாதாரண சித்தி (S) பெற்றவர்கள் அல்லது 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தோற்றி ஆகக்குறைந்தது மூன்று பாடங்-களில் சித்தியடைந்து ஆகக் குறைந்தது 180 புள்ளிகள் பெற்றவர்கள் 2000ஆம் ஆண்டுக்கு பின்னர் பழைய பாடவிதானத்தின் கீழ் தோற்றி ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் 135 புள்ளிகள் அடங்கலாக சாதாரண பொதுப்பரீட்சையில் 30 புள்ளிகள் பெற்றவர்கள் ஆகியோர் மேற்படி வெளிவாரி கற்கைநெறியை தொடர முடியும்.

கடந்த 5 வருடங்களாக மேற்படி வெளிவாரி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படாமலிருந்-தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்த போதும் இனிவரும் காலங்களில் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலும் புதிய நடைமுறையிலும் வெளிவாரி கற்கைநெறிகளை தொடர முடியுமென குறிப்பிடப்படுகின்றது.

# எச்சரிக்கை: இது நல்லதற்கல்ல



பாடசாலை மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்டபின் தொடருகின்ற போராட்டங்களை வன்முறை நிறைந்ததாக மாற்ற சில தீவிரவாதப் போக்குடையோர் செயற்படத் தொடங்கியுள்ளதை யாழ்.நகரில் நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. நீதிமன்றத்தை தாக்குவது முதல் பொலிஸாருடன் முறுகல் நிலையை கொண்டுவருவது வரை இவ்வன்முறைச் சம்பவங்கள் தொடருகின்றன.

கொலையாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் பரவலாக நடைபெற்றுவரும் போராட்டங்கள் குறியாக உள்ளன. பாடசாலை மாண-விகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதற்கமைய இப்போராட்டங்கள் வன்முறையற்ற விதத்தில் நடைபெற்று வருகின்றன. ஆனால் இப்போராட்டங்களில் வன்முறையை புகுத்தி அதன்மூலம் குளிர்காய சில தீவிரவாத சக்திகள் முனைகின்றன.

பொலிஸாரால் வன்முறைகளை கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் இராணுவம் வரவழைக்கப்படுகிறது. இராணுவம் வன்முறையாளர்கள் மீது தாக்குதல் நடாத்த வேண்டிய கட்டாயத்தை வன்முறையாளர்கள் உருவாக்குவார்கள். இதன்மூலம் மீண்டும் இராணுவம் அராஜகம் புரிகிறது என்கிற பிரச்சாரத்தை மேற்கொள்ள முடியும் என இவர்கள் நினைத்திருக்கலாம்.

யுத்தம் முடிந்து தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டு வரும் சகஜநிலைமைகளை குழப்புவதற்கு இச்சக்திகள் முனையக்கூடும். இதைத்தான் புலம்பெயர் நாடுகளில் இன்னும் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் விசுவாசிகளும் விரும்புகின்றனர். இன்னும் புலிப்புராணம் பாடி அந்நாட்களும் வந்திடாதோ வருமானம் ஈட்டுவதற்கு வழிகிடைத்திடாதோ என ஏங்கிக்கொண்டிருப்பவர்களுக்கு இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் விருப்பமானவைதான். இதனால்தான் அவர்களினால் வெளிக்கொணரப்படும் இணையங்களும் இவ்வன்முறைச் சம்பவங்களை ஆதரித்து செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

மாணவர் போராட்டங்களில் மாணவர்கள் தாங்கி நிற்கும் பதாகைகளில் புலிகளுக்கு ஆதரவான சொற்கள் காணப்படுவதையும் அவதானிக்க வேண்டியிருக்கிறது. நீண்ட நாட்களாக இத்தகைய ஒரு போராட்டத்தை எதிர்பார்த்துக் கிடந்தவர்கள் இச்சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாக்க முயலுகின்றனர். மக்களைப் பதற்றநிலைக்குள் வைத்திருப்பதன் மூலமே தாங்கள் முக்கியஸ்தர்களாகவும் பல்வேறு இலாபங்களை ஈட்டக்கூடியவர்களாகவும் இருந்த காலத்தின் ருசியை எண்ணிக் களமிறங்குகின்றனர் அவர்கள்.

இதன் ஆபத்தை உணர்ந்ததினால்தான் என்னவோ மாவை சேனாதிராசாவும் முதல்வர் விக்கினேஸ்வரனும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வன்முறையாளர்களுக்கு எதிராக அறிக்கைகளை விட்டிருப்பதும் கவனத்திற்குரியது மட்டுமல்ல வர்வேற்கத்தக்கதாகும்.

மக்களிடையே மாணவி வித்தியாவின் படுகொலையில் எற்பட்டிருக்கின்ற அனுதாப அலையை வன்முறையாளர்கள் தம்முடைய தேவைகளுக்கு பயன்படுத்துவதை ஆரம்பத்தில் கிள்ளியெறிய வேண்டும். வன்முறைகள் தீர்வைக் கொண்டுவராது மீண்டும் மீண்டும் வன்முறையைப் பெருக்கி அழிவுகளையே கொண்டுவரும் என்பதற்கு கடந்த 30வருட கால போராட்ட வரலாறே சாட்சி. அமைதிநிலைக்குத் திரும்பி சுமூக வாழ்க்கையை வாழ்ந்து வரும் தமிழ்மக்களை மீண்டும் வன்முறை கலாசாரத்திற்குள் தள்ளி உயிரைக் கையில் பிடித்தபடி உலைதலையும் வாழ்க்கைக்குத் தள்ளிவிட ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

வன்முறையாளர்களின் நோக்கத்தை புரிந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் அவர்களை விரட்டியடிப்பதுடன் அவர்களின் நோக்கங்களை நிறைவே-றாமல் செய்வதற்கு முன்வரவேண்டும்.

(நன்றி: இணையம்)

அன்புள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறான்.
- காந்தியடிகள

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நம் மனதில் என்ன இருக்கிறது?

மற்றவனைத் தனக்குச் சமமாய் எடுக்காதவன் எல்லாம் மனிதப்பிறவியில் சேர்த்தியாக முடியுமா என்பதாக புதுமைப்பித்தன் தனது சிறுகதையொன்றில் குறிப்பிட்டிருப்பார்.

நம் தமிழ்ச் சமூகத்திற்கென்று பிரத்தியேகமாக வளர்ந்துவிட்டிருக்கும் ஒரு குணாம்சம் எனச் சொல்லக்கூடியதும் இந்த, 'மற்றவர்களைச் சமமாய்க் கருத மறுக்கும்' போக்குத்தான்.

இதுதான் பகைமறப்பு, நல்லிணக்கம் என்ற வார்த்தைகளையே ஏதோ இழிவைக் கேட்டது போல முகம் சுளிக்க வைக்கிறது. சிங்கள, முஸ்லிம் சமூகங்களோடு சேர்ந்து வாழ முடியாமைக்குக் காரணங்களைத் தேடிச் சொல்லிக்கொண்டிருக்க வைக்கிறது.

நம்மில் சிலர் நினைத்துக்கொண்டிருக்கும் "புத்திசாலிச் சமூகம் நாங்கள்" என்ற சுயகற்பிதமும், அறிவுரீதியான மேலாதிக்கமும், மற்றோரைக் கீழ்நிலைப்படுத்தி அவர்கள் மீது அதிகாரம் செலுத்த விரும்பும் மனோபாவத்தையே கொண்டிருக்கிறது.

"நான் இந்த சமூகத்தின் மதிப்புக்குரிய உயர்ந்த பிரஜை. எனவே நான் சொல்வதையே கேள்!" என்கிற அதிகாரக் குரலைத் தங்களிடம் வைத்திருக்கும் தரப்பினரே, தமிழ் மக்களின் எண்ணம் இதுதான் என்று வெளியே சொல்பவர்களாகவும், அதற்குப் பின்னால் தமிழர்களை அணிவகுக்க வைப்பதிலும் வெற்றி பெறுகிறார்கள்.

இவர்கள்தான் நமது சமூகத்திற்காக, மக்களுக்காகச் சிந்திக்கிறார்கள் பேசுகிறார்கள் என்பதுதான் நமது பிரச்சினையில் அவிழ்க்க முடியா முடிச்சாக தொடர்ந்து வதையளித்துக் கொண்டிருக்கிறது.

இவர்களிடமிருந்தும், இவர்கள் உருவாக்கி அளிக்கும் சிந்தனையிலிருந்தும் மீண்டு வந்தே, இன்றைய பிரச்சினைக்கும் எமது மக்களின் துக்கங்களுக்கும் விடை தேடியாக வேண்டும்.

ஏனெனில், இவர்கள், தோற்றுப் போனதென்று நன்கு தெரிந்த வழிகளையும் சிந்தனைகளையும், தங்களது நம்பிக்கைகளின் மேலுள்ள பிரியத்தால் விடாமல் பற்றிப் பிடித்திருப்பவர்கள்.

இதுகாலவரை கொட்டிமுழக்கி வெறியேற்றிய இந்தச் சிந்தனையால் மக்களைப் பாடழிவுக்குத் தள்ளிவிட்ட தவறுக்கு மனம் வருந்தவோ மன்னிப்புக் கோரவோ இப்போதும் எண்ணாதவர்கள்.

மக்களை மீண்டும் மீண்டும் அதே ஆபத்தான திசைவழிகளில் அழைத்துச் செல்வது பற்றி எந்தவித கூச்சமோ குற்றவுணர்வோ கொள்ளாதவர்கள்.

பல தரப்புகளும் சம்பந்தப்பட்டிருக்கும் இனப்பிரச்சினையில், மறுபக்கத்தை மறைத்து வெறுத்து விரோத நிலையில் வைத்துக் கொண்டு, தனது பக்கத்தை மட்டும் ஒரே வாய்ப்பாடாக உருப்போட்டுக் கொண்டும் ஒற்றைத் தேசிய உருவாடியபடியும் இருக்கிறார்கள்.

இப்படி பன்மைத்துவத்தை மறுத்து ஒற்றைப்படையான சிந்தனைக்குள் மனிதர்களை மாட்டிவைத்து லாபம் கண்டுகொண்டிருக்கும் இவர்களால் எப்படி இன்றைய நம் பிரச்சினைகளிலிருந்து மீள வழி சொல்ல முடியும்?

இவர்களது உளுத்துப்போன அரசியல் குப்பையில் அர்த்தங்களையும் நமது மக்களின் வாழ்வுக்கான வழிகளையும் தேடுவது புழுத்த பிணத்தில் இதயத்துடிப்பைச் சோதிக்கிற மாதிரிதான்!

'சர்வதேச அழுத்தம் வரும்' என்று, கண்பார்வையில்லாதவன் காற்றில் கைகளைத் துழாவிக் கொண்டிருப்பது போல கனகாலமாக இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த சர்வதேசம் உண்மையில் என்ன சொல்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவோ புரிந்துகொண்டதாக ஒப்புக்கொள்ளவோ, இவர்களிடமுள்ள குறுந்தேசிய வெறியும் மாற்று இனவெறுப்பும் விடுவதாயில்லை.

அதனால்தான், சிங்கள மக்களின் மத்தியிலிருந்து இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முயற்சிக்கும் சக்திகளுடனும் கூட இவர்களால் கைகோர்க்க முடிவதில்லை. சிங்கள மக்களுடைய பிரச்சினைகள் பற்றி இவர்களால் இங்கு பேசக்கூட முடிவதில்லை.

ஏனைய சமூகத்தினரை மனிதர்களாயே கணக்கெடுக்க முடியாதவாறு மனம் நிறைய வெறுப்பையே நிறைத்து வைத்திருக்கும் 'முசுடான' சமூகமாகத்தான் நாம் இருக்கப் போகிறோமா?

- ஆசிரியர்

# கோத்தா குற்றம் செய்யாவிடின் அச்சமடையத் தேவையில்லை

## என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய குற்றம் எதனையும் செய் திருக்காவிட்டால் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும், சட்டங்களின் பின்னால் மறையத் தேவையில்லை எனவும் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு அமைச்சரவையின் அனுமதியுடனேயே நிறுவப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி. சுட்டிக் காட்டியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அமைச்சரவையினால் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டதாக ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு சட்டவிரோதமானது என எவரேனும் கூறினால் அது தங்களுடைய பிழைகளை மூடிமறைத்துக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் ஒப்புதலுக்கு அமையவே நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார். நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

தைரியமாக விசாரணைகளை எதிர்நோக்கி குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். சுயாதீன ஆணைக் குழுக்கள் துரித கதியில் நிறுவப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நைஜீரியாவில் கடத்தப்பட்டுள்ள இலங்கையரை விடுவிக்க கப்பம்

## கோரிக்கை விடுக்கும் ஆயுததாரிகள்

(கொழும்பு)

நைஜீரியாவில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ள இலங்கை பொதுமகனை விடுவிக்க பணயப்பணம் கோரப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் ஒன்டோ என்ற பிரதேசத்தில் வைத்து இந்த வாரத்தில் இலங்கையர் ஒருவர் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார். இதன்போது அவருக்கு பாதுகாப்புக்காகச் சென்ற பொலிஸ்காரர் ஒருவர் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அத்துடன் இலங்கையர் பயணித்த வாகன சாரதி காயமடைந்தார்.

இந்தநிலையில் கடத்தப்பட்டவர், நைஜீரியாவின் இலங்கை தூதரக பணியாளரான கருணாரட்ன என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர், இத்தாலிய நிறுவனம் ஒன்றுக்காக கடந்த 10 வருடங்களாக நைஜீரியாவில் தங்கி பணியாற்றி வருகிறார். இந்தநிலையில் கடத்தல்காரர்கள், கருணாரட்னவின் குடும்பத்தினருடன் தொடர்புகொண்டதாக நைஜீரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருணாரட்னவை விடுவிக்க வேண்டுமானால் பெருந்தொகை பணத்தை தர வேண்டும் என்று கடத்தல்காரர்கள் கோரியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதி மீது கல்வீச முயற்சி? இரண்டு கடற்படையினர் கைது

(கொழும்பு)

மாத்தறையில் நடந்த போர் வீரர்கள் நினைவு அணிவகுப்பின் போது, மைத்திரிபால சிறிசேனவின் மீது கல் வீசத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தில் இரண்டு கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தகவல் வெளியிடுகையில்,

"மாத்தறையில் நடந்த அணிவகுப்பில் பங்கேற்ற, மாற்றுத்திறனாளியான கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சக்கரநாற்காலியை தள்ளிச் சென்ற கடற்படை சிப்பாய் ஒருவரிடம் இருந்த பையில இருந்து கல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனினும், அதுதொடர்பில் தனக்கு ஏதும் தெரியாது என்றும் தன்னை சிக்கலில் மாட்டி வைக்க வேறு எவரேனும் தனது பையில் கல்லைப் போட்டிருக்கலாம் என்றும் குறித்த கடற்படைச் சிப்பாய் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் சந்தேகத்தின் பேரில் மற்றொரு கடற்படைச் சிப்பாயும் கைது செய்யப்பட்டுள்ளார். மாத்தறை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இவர்கள் இருவரையும், மே 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற அணிவகுப்பில் இவர்கள் எதற்காக கல்லைக் கொண்டு வந்தனர் என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.

# சாதாரண தரப்பரீட்சைக்கு 20 முதல் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இவ்வாண்டு கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி முதல் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பூர்த்தி செய்யும் விண்ணப்பங்களை ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இவ்வாண்டுக்கான கல்வி பொதுத்தரா தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி முதல் தமது விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க முடியும்.

இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இதனிடையே பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்ப படிவங்களை முழுமையாக பூர்த்தி செய்து குறித்த திகதிக்கு முன்னர் அதிபர் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தமது விண்ணப்பங்களை நிரப்பி உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதோடு குறித்த திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 19 ஆவது திருத்தம் மற்றும் தமிழ் அரசியல்

எஸ்.ஐ.கீதபொன்கலன் கட்டுரையிலிருந்து

இந்த ஏப்ரல் 2015 இல் அரசியலமைப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோது, அந்தப் பிரச்சினையை தமிழ் கட்சிகள் எப்படி எடுத்துக் கொண்டன? 19 ஆவது திருத்தத்துக்கு தங்கள் ஆதரவை தெரிவிப்பதற்காக தமிழ்க் கட்சிகள் ஏதாவது கோரிக்கைகளை முன் வைத்திருந்தனவா? அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான விடயங்கள் எதனையும் தமிழ்க் கட்சிகள் கேட்காதபோது எதற்காக கொழும்பு அதற்கு சலுகை வழங்க வேண்டும்? அரசாங்கம் தானாக முன்வந்து அதிகாரத்தை பகிர வேண்டும் என தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று ஒருவர் பாதுகாப்பாக வாதிட முடியும், ஆனால் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் மோதலில் இருந்து அவர் பாடம் எதையும் கற்றிராதவராக இருந்தால்தான் அப்படி வாதிட முடியும்.

அரசாங்கம் அதிகாரப் பகிர்வு விடயத்தை ஒரு தர்ம காரியமாகப் பார்க்கவில்லை என்பது கடந்த காலத்தை நோக்கினால் தெளிவாகப் புரியும். தமிழர்கள் வேலை செய்ய வேண்டியது அவசியம், உண்மையில் அரசியல் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமானால் அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி உள்ளது.

- ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக கொள்கைகளுக்குள் அரசியல் கருவிகளின் உபகரணங்களை ஆதாயமாகக் எடுத்துக்கொண்டு இதைச் செய்ய வேண்டும், வன்முறைகள் ஊடாக அல்ல. அரசியல் நோக்கங்களுக்காக வன்முறைகளைப் பயன்படுத்துவது அநேகமாக தமிழ் சமூகத்தையும் மற்றும் முழு அளவில் நாட்டையும் முற்றாகச் சீரழித்து விடும்.

ஒருவர் தெரிவிப்பதின்படி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈபிடிபி) தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய பிரிவுகளையும் திருத்தத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதாம். இதை ஒரு அடையாளமாக எடுத்துக் கொள்ளலாம்.

எப்படியாயினும் ஈ.பி.டி.பி. அதன் வாக்கு வங்கியையும் மற்றும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பொறுத்தமட்டில் ஒரு சிறுபான்மைக் கட்சி. நாடாளுமன்றத்திலும் மற்றும் அதற்கு வெளியிலும் தமிழ்ச் சமுதாயத்தை பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்துவதும் மற்றும் முன்னணிக் கட்சியாக உள்ளதுமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் (ரி.என்.ஏ) நிலைப்பாடு என்ன? ரி.என்.ஏ, 19 ஆவது திருத்தத்தில் எந்த வழியிலும் அதிகாரப் பகிர்வு தொடர்பான கேள்விகளை சம்பந்தப்படுத்தவில்லை. உண்மையில் இன மோதலுக்கு எந்தவித புதிய தீர்வும் இன்றியே திருத்தத்துக்கு தந்திரபூர்வமான அனுமதி வழங்கப்பட்டது.

19 ஆவது திருத்தத்துக்கான அசல் பிரேரணை, 13 ஆவது திருத்தத்தை ஒன்றில் முற்றாக அமுல்படுத்துவது அல்லது அதை மேம்படுத்துவது போன்ற எதுவித பிரிவுகளும் இன்றியே சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரைபுதான் உச்ச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ரி.என்.ஏயில் இப்போது முக்கிய பிரமுகராக திகழும் எம்.ஏ.சுமந்திரன் உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபை தீவிரமாக பாதுகாத்தார். 19 ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் "தமிழர்" அல்லது "அதிகாரப் பரவலாக்கம்" என்று ஒரு வார்த்தை கூட இடம்பெறவில்லை. கட்சியானது வெளிப்படையாகவே திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தது! திருத்தத்தின் அசல் வடிவத்தை அனுமதித்து அதற்காக பரப்புரையும் மேற்கொண்டது. ஆகவே தமிழ்க் கட்சிகள் தங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி எதையும் கோராமல் நிபந்தனையின்றி தங்கள் ஆதரவை வழங்கியுள்ளபோது அரசாங்கத்தை குற்றம் சொல்வது நியாயமல்ல.

திருத்தத்துக்கு சாதகமாக வாக்களிக்கும் போது தனது உரையில் சுமந்திரன் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்க வேண்டும். தமிழர்களின் பிரச்சினையை வெளிச்சம் போட்டுக் காண்பிப்பதற்கு இது ஒரு முக்கியமான வாய்ப்பாக இருந்தது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் ஏன் இந்த விடயத்தை எழுப்பியிருக்க வேண்டும் என்று கூறுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு காரணங்களாவது உள்ளன. ஒன்று, 19 ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டும் கையாளவில்லை. நாடு எதிர்நோக்கும் சில முக்கிய பிரச்சினைகளை தீர்க்கவும் அது முயற்சித்துள்ளது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் கூட முக்கியமானதுதான்.

இரண்டாவது 19 ஆவது திருத்தத்தில் அதிகாரப் பகிர்வு விடயத்தை சேர்த்துக்கொள்ளும் சாத்தியம் பூச்சியமாக இருந்த போதிலும், சிறுபான்மையினரின் மனக் குறைகளை வெளிச்சம் போட்டுக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்பினை அது வழங்கியிருந்தது. மூலோபாய ரீதியில் அந்த வாய்ப்பு சுரண்டப்பட்டு விட்டது. 19 ஆவது திருத்தத்தின் போது தான் நடந்து கொண்ட விதத்தின் ஊடாக இனப்பிரச்சினை இனிமேலும் முக்கியமானதல்ல என்கிற கருத்துக்கு ரி.என்.ஏ பங்களிப்புச் செய்துள்ளது. தமிழ்த் தேசியவாதிகளை இது நிச்சயமாக ஏமாற்றி இருக்கும். உண்மையில் ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் வெற்றி, அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கு ஒரு புதிய வாய்ப்பினை வழங்கியிருந்தது. ஏனென்றால் அவரது தேர்தல் வெற்றிக்கு தமிழர்கள் ஒரு முக்கிய பங்கினை வழங்கியிருந்தார்கள். அந்த வாய்ப்பைக் கூட தமிழ்க் கட்சிகள் விவேகத்துடன் பயன்படுத்தவில்லை. போர் நிறைவடைந்ததும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான வெற்றி பெற்ற அரசாங்கத்துக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஒருவேள்ளை இன நல்லிணக்கத்துடன் கூடிய ஒரு விரும்பத்தக்க நாட்டை அடைவதற்கு இரண்டு முக்கிய வழிகள் இருந்தன:

(1) ஒரு நியாயமான கட்டமைப்புக்குள் தமிழர்களின் மனக்குறைகளை தீர்க்கும் ஒரு அரசியல் நடவடிக்கை ஊடாக மற்றும்

(2) இராணுவ வழிகளின் ஊடாக, தேசிய பாதுகாப்புக்கு மட்டும் கவனம் செலுத்துவது.

முந்தைய அரசாங்கம் இரண்டாவது வழியினையே தெரிவு செய்தது. தமிழர்கள் மீதான இராணுவ கட்டுப்பாட்டை இறுக்கமாக்கியதுடன் முன்னாள் இராணுவத் தளபதியான ஆளுநர் மூலமாக இராணுவ பாணி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.

அரசியல் தீர்வை காண்பதில் தீவிரமாக உள்ளது என்கிற உணர்வை ராஜபக்ஷ அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை. நல்லிணக்க சமிக்ஞைகளை அது வெளிப்படுத்தவில்லை. வெளிப்படையாக ராஜபக்ஷ தனது வாக்குத் தளத்திற்கு உதவுவதிலேயே குறியாக இருந்தார்.

புதிய ஜனாதிபதித் தேர்தலுடன் அரசியல் சூழ்நிலை மாற்றம் பெற்றது. சாதகமான சமிக்ஞைகள் தொடர்ந்து காட்டப்பட்டன. உதாரணத்துக்கு, சந்திரசிறி ஆளுநர் பதவியில் இருந்து அகற்றப்பட்டார், ரி.என்.ஏ உடன் பகைமை பாராட்டி வெளிப்படையாகவே ராஜபக்ஷ அரசாங்கத்தின் நலன்களுக்காக சேவையாற்றிய வடமாகாண முன்னாள் தலைமைச் செயலர் திருமதி.விஜய லெச்சுமியும் அகற்றப்பட்டார். இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சர்ச்சைக்குரிய சில காணிகள் அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவை யாவும் இன மோதலுக்கு மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் கீழ் ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரும் என்பதற்கு உத்தரவாதமாக இல்லாதபோதிலும் குறைந்தபட்சம் சாதகமான சமிக்ஞைகள் அனுப்பப் பட்டுள்ளன.

ஒன்றில் ரி.என்.ஏ அறிவில்லாமல் நடக்கிறது அல்லது ரி.என்.ஏ பகையான சமிக்ஞைகளை அனுப்புகிறது. உதாரணமாக வட மாகாணசபை சர்வதேச விசாரணையை கோரும் ஒரு தீர்மானத்தை மார்ச்சில் நிறைவேற்றியது. சாதாரணமாக சொல்வதானால், இது பகைமையானதாகவும் தவறான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும் உள்ளது. சுவாரஸ்யமாக இதுவரை காலமும் இந்த பிரேரணையை எதிர்த்துவந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ராஜபக்ஷ போனதின் பின் திடீரென இந்தப் பிரேரணையை சபையின் முன் கொண்டுவர முடிவு செய்தார். இது மோசமான உத்தி.

இந்த பிரேரணை அசலாக கடந்த வருடம் சிவாஜிலிங்கம் அவர்களால் முன்மொழியப்பட்டது. அதை இந்த மார்ச் மாதம் உறுதிப்படுத்த வேண்டும் என விக்னேஸ்வரன் ஏன் நினைத்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. வெளிப்படையாக அவரது தொகுதிக்கு அவர் தீனி போடுகிறார்.

இந்தப் பிரேரணை மற்றும் அங்கு வருகை தந்த சர்வதேச தலைவர்களுடன் விக்னேஸ்வரன் நடத்திய கலந்துரையாடல்களின் உள்ளடக்கம் என்பன தெளிவாக விளக்குவது,

(18 ஆம் பக்கம்



**ரி.என்.ஏயில் இப்போது முக்கிய பிரமுகராக திகழும் எம்.ஏ.சுமந்திரன் உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரைபை தீவிரமாக பாதுகாத்தார். 19 ஆவது திருத்தம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் "தமிழர்" அல்லது "அதிகாரப் பரவலாக்கம்" என்று ஒரு வார்த்தை கூட இடம்பெறவில்லை. கட்சியானது வெளிப்படையாகவே திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தது. திருத்தத்தின் அசல் வடிவத்தை அனுமதித்து அதற்காக பரப்புரையும் மேற்கொண்டது. ஆகவே தமிழ்க் கட்சிகள் தங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி எதையும் கோராமல் நிபந்தனையின்றி தங்கள் ஆதரவை வழங்கியுள்ளபோது அரசாங்கத்தைத் குற்றம் சொல்வது நியாயமல்ல.**

# தான்செய்த தவறு என்ன? மனம் திறக்கிறார் மகிந்த

தவறிழைத்த சிலரை தனது ஆட்சியின் போது தண்டிக் காமல் விட்டு வைத்தமையே தாம் இழைத்த பாரிய தவறு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தெய்யந்தர பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தனது ஆட்சியின் போது சிலர் தவறிழைத்துள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்காக வும் நல்லிணக்கத்திற்காகவும் அய ராது உழைத்தமையினால் தவறி ழைத்தவர்களை இனங் காண்பதில அக்கறை கொள்ளவில்லை. ஆனால் அதுவே பாரிய தவறு என தற்போது உணரமுடிகிறது.

நல்லாட்சிக்கான அரசாங்கத் தினைப் போன்று தாம் அப் பொழுதே செயற்பட்டிருந்தால் அனைவரின் அவலங்களும் வெளிக்கொணரப்பட்டிருக்கும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# அரசியல் கைதிகளின் விபரம் இல்லை என்கிறார் ஜனாதிபதி



சிறைகளில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தொடர்பான விபரப்பட்டியல் ஏதும் தம்வசம் கிடையாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி இல்லத்தில் நேற்று முன்தினம் ஊடக நிறுவனங் களின் தலைவர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் நிறை வில் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச தரப்பினர் தம் வச முள்ள பல்வேறு பட்டியல் களை வெளியிட்டு வருகின்ற னர். இந்த நிலையில் இலங்கை அரசிடம் தடுப்பிலுள்ள அரசியல் கைதிகள் தொடர்பான விபரப் பட்டியல் ஏதேனும் உள்ளதா என வினவியதற்குப் பதிலளித்த ஜனாதிபதி தம் வசம் எந்த வொரு பட்டியலும் இல்லை என்று பதிலளித்தார்.

இதேவேளை, ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற சதிப்பு ரட்சி தொடர்பான விசாரணை யின் நிலை என்ன என எழுப் பிய கேள்விக்கு ஜனாதிபதி பதிலளிக்கையில், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான ஜனவரி 8 ஆம் திகதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து தேர்தல் முடிவுகள் வெளியா வதை தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதென எனக் குத் தகவல் கிடைத்துள்ளது என்று கூறினார்.

அது தொடர்பில் விசாரணை கள் இடம்பெற்று வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். மேலும் தன்னைக் கொலை செய்ய முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் குறித்து இதுவரை மூவர் கைதுசெய்யப்பட்டு விசா ரணைகள் முன்னெடுக்கப்படுவ தாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் அடுத்து பொதுத் தேர்தல் இடம்பெறும் என்றும் அது புதிய முறையிலா அல் லது பழைய முறையிலா நடை பெறும் என்று இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, பொலிஸ் நிதி மோசடி பிரிவை இரத்து செய் வதற்கு தான் உறுதி அளிக்க வில்லை என்றும், ஆனால் அதில் உள்ள சில சரத்துக்கள் குறித்து பிரதமருடன் கலந்துரை யாடப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிதி மோசடி பிரிவு அரசியல் கட்சி ஒன்றின் செயற் றிட்டத்திற்கு இயங்குகிறது என எவரும் ஆதாரத்துடன் முறைப் பாடு செய்தால் அது குறித்து ஆராயப்படும் என்றும், ஆனால் தற்போதைய நிலவரத்தின்படி அதில் அரசியல் செயற்பாடு இல்லை என்பது புலப்படுவதாக வும் ஜனாதிபதி கூறினார்.

## பொருத்தமற்ற வகையில் பயணம்

# பொதுபலசேனாவின் தலைவர் பதவியிலிருந்து விலகினார்

பொதுபலசேனா இயக்கத் தின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டதுடன், அமைப் புடனான சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டுள்ளார்.

பொதுபலசேனா இயக்கத் தின் பாதை தமக்கு பொருத்தமான வகையில் அமையவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவி விலகுதல் தொடர்பில் விமலஜோதி தேரர், இயக்கத் தின் பொதுச் செயலாளர் கல கொடத்தே ஞானசார தேரருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத் துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்ன தாக இயக்கத்தின் பொதுச் சபைக கூட்டம் சுகததாச அரங்கில் நடைபெற்றபோது, பௌத்த பயங் கரவாதி என்றழைக்கப்படும் மியன்மாரின் விராது தேரரும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணி யில் தொடர்ந்தும் இயக்கத்தில் தலைமைப் பதவி வகிப்பது பொருத்தமாக இருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அசின் விராது தேரரின் இலங்கை விஜயமானது பாதக மான விளைவுகளையே ஏற்படுத்தி யதாகவும், பௌத்தர்களின் நன் மதிப்பை குறைத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

சில நோக்கங்களை நிறை வேற்றிக்கொள்ளவே பொதுபல சேனா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

போலி பௌத்த பிக்குகளை இல்லாதொழிக்க, போலியாக பௌத்த மதத்தின் பெயரில் பணம் திரட்டுதல், மோசடி செய்வதனை தடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். தற்போது பொது பல சேனா இயக்கம் செல்லும் பாதையை ஏற்றுக் கொள்ள முடி யாது என அவர் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் பறந்ததா புலிக்கொடி?

முள்ளிவாய்க்கால் நினைவஞ் சலியின்போது தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தின் கொடி பறக்கவிட்டதாகக் கூறப் படும் தகவல்களில் எவ்வித உண மையும் இல்லை என அர சாங்கம் திட்டவட்டமாக அறி வித்துள்ளது.

புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைப்படி விடுதலைப் புலி களின் கொடி அன்றைய தின நினைவுகூரலின்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், வேறெந்தப் பகுதிகளிலும் பறக்க விடப்படவில்லை என்று பாது காப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித் துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற நினைவு கூரலில தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியை பறக்க விட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுக் கூட்ட மொன்றில் உரையாற்றிய போது தெரிவித்திருந்தார்.

எனினும் இதனை அமைச்சர் ருவன் விஜேவர்தன மறுத்துள் ளார்.

சில வரப்பிரசாதங்களுக்காக வும், அரசியல் இலாபங்களுக் காகவும் நோக்காகவும் சில ஊடகங்களும், தனிநபர்களும் இவ்வாறான பொய்ப் பிரசாரங் களை செய்திருப்பதாக அமைச் சர் கூறியுள்ளார்.

தென்னிலங்கையிலுள்ள மக் களை ஏமாற்றி, இனவெறியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவோர் தொடர்பில் கவலை யடைவதாக தெரிவித்துள்ள அவர், தென்னிந்தியா உள்ளிட்ட நாடுகள் போர்க் காலங்களில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்களை நினைவுகூர்ந்த புகைப்படங்களை பயன்படுத்தி இவ்வாறான ஈனச் செயல் களில் ஈடுபடுவதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

# உயர் நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்கும் உரிமை உள்ளது



உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிப்பதற்கும் அதிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுவதற் கும் நாட்டு பிரஜைகளுக்கு உரிமை இருக்கிறது என்று சபை முதல்வரும் அமைச்சரு மான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கடந்த செவ் வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் தலை மையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனுத்தாக்கல், வாய் மூல விடைக்கான கேள்விச் சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், நிலையியற் கட்டளை யின் 23/2 ஆம் பிரிவின்கீழ் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி களை எழுப்பினார்.

முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் கோத்தாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு தொடர்பில் உயர் நீதிமன் றம் வழங்கியுள்ள தீர்ப்பு சம்பந்த மாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துகள் குறித்தே எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி களை எழுப்பியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு பிரதமர் விரி வான பதில்களை வழங்கு வாரென [illegible] சபை முதலவர் சபைக்கு அறிவித்தார்.

அத்துடன், நீதி மன்றத்தின் தீர்ப்பை நாம் ஏற்கிறோம். அதே போல் நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு இருக்கிறது.

# 20 ஆவது திருத்தத் சட்டம் விரைவில் இணக்கப்பாடு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை மாற்றத்துடன் கூடிய 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எதிர்வரும் சில தினங்களில் இறுதி இணக்கப்பாடு எட்டப் படும் என, அரசியல் வட்டாரத தக வல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த திருத்தச் சட் டம் தொடர்பில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமையில் விஷேட கலந்துரையாடல் ஒன்று நாடாளுமன்ற வளாகத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதமர் உள்ளிட்ட நாடாளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

புதிய தேர்தல் முறை மாற்றம் குறித்து ஆராய நியமிக் கபபட்ட அமைச்சரவை உப செயற குழுவினரின் அறிக்கை இதன் போது ஜனாதிபதி யால் சமர்பபிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சில கட்சி தலைவர்கள் மீண்டும் சில யோசனைகளை முன்வைத்தாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி இது பற்றி அவ தானம் செலுத்த பிரதமர் மற்றும் ஜனாதிபதியும் இணக்கம் தெரி வித்துள்ளனர்.

# தகவலறியும் சட்டமூலம் சுதந்திரக்கட்சி ஆதரவு

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட மூலத்தை விரைவில நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. இந்த சட்டமூலத்துக்கு சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவினை வழங்கும் என்றும் எனவே உடனடியாக அதனை நாடாளுமன்றத் துக்கு கொண்டுவருமாறு வலியுறுத்துவதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதி பால இந்த விடயத்தை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்,

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட மூலத்தை விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரு மாறு கோரிக்கை விடுக்கின்றோம். அந்த சட்ட மூலத் துக்கு ஆதரவு வழங்க நாங் கள் தயாராக இருக்கின்றோம். எனவே அதனை விரைவாக நாடா ளுமன்றத்துக்கு கொண்டுவர அரசாங்கம் நட



வடிக்கை எடுக்கவேண்டும். இதேவேளை எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் நாங்கள் முறைப்பாடு செய்வதில் எந்த மாற்றமும் இல்லை. அதனை நாங்கள் விரைவில் செய்ய வுள்ளோம் என்றார்.

# வித்தியாவின் கொலையும் விடுக்கப்படும் கோரிக்கையும்



புங்குடுதீவில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவி சி.வித்தியா பாலியல் வன்புணர்விற்குப் பின்னர் மிகக் கோரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சட்டம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி நாளுக்கு நாள் பகிஷ்கரிப்புக்களும் போரட்டங்களும் வலுப்பெற்று வருகின்றன. இவை எதைச் சொல்ல வருகின்றன என்பது தொடர்பாக ஊடகங்கள் தெளிவு படுத்த வேண்டிய தேவை தற் போதுள்ளது.

துன்பங்கள் துயரங்கள் சுமந்து போர் வன்முறைக்குள் வாழ்ந்த எமது சமூகம் அதிலிருந்து மீண்டு வரும் வேளை சமூக வன்முறைகள் வாசலுக்கு வந்து நிற்கின்றது. புங்குடு தீவுப் பிரதேசத்தில் பாடசாலை மாணவிக்கு இழைக்கப் பட்ட அநீதிக்கு எதிராக நீதி தேவதை நியாயமான தீர்ப்பினை வழங்க வேண்டும் என்று கோரியே இவை தொடர்கின்றன.

இந்த பகிஷ்கரிப்புக்களும் கதவடைப்புக்களும் இன்று வலுப்பெறுவது ஒருபக்கம் நியாயமானதேயாகும். காரணம் போர் ஓய்ந்த பின்பு பல்வேறு சமூக சீர்கேடுகள் எமது சமூகத்தில் வலுப்பெற்று வருகின்றன. சட்டத்தின் முன் சில குற்றவாளிகள் சாட்சியப்படுத்தப்பட்ட போதும் கூட சில சட்டச்சிக்கல்கள் காரணமாகவும்,



சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக குற்றவாளிகள் சிறையாக்கப்படாது தப்பித்துக்கொள்கின்றனர்.

இங்கே சட்டத்தையோ அல்லது சட்டவல்லுநர்களையோ குறை சொல்வதில் அர்த்தமில்லை. வரையறுக்கப்பட்ட சட்ட எல்லைக்குள் தான் சில வாக்கு மூலங்களைப் பெற முடியும். இதனால் சட்டத்தின் மூலம் கிடைக்கப்படும் தண்டனைகள் குற்றவாளிகளுக்கு குறுந் தண்டனைகளாக மாறுகின்றன. இதனால் குற்றத்தண்டனைக்கு அஞ்சாத குற்றவாளிகள் மீண்டும் குத்துக்கரணம் அடிக்கப் புறப்படுகின்றனர்.

இன்று எமது சமூகத்தில் மனங்களையும் மனிதர்களையும் மதிக்கின்ற சிந்தனைகளெல்லாம் மலையேறிவிட்டது. வன்முறைக்குள் வாழ்ந்த எமது சமூகம் வன்முறைதான் வாழ்க்கை என்று தீமானித்து விட்டது. வாசல்கள் தோறும் வேதனைகளை சுமந்த அப்பாவி மக்கள் மீண்டும் மீண்டும் தமது துன்பத்தில் இருந்து விடுதலை பெற வழியின்றி நிற்கின்றனர். இதற்கொரு தீர்வினை பொதுமைப்பட்ட ரீதி யிலேனும் எமது சமூகம் சிந்தித்துத்தான் ஆக வேண்டும்.

அந்த அடிப்படையில் சட்டத்தின் முன் சந்தேக நபர்களை நிறுத்தி தீர்ப்பளிக்க இருக்கின்ற சட்ட வல்லுநர்களுக்கு சமூகத்தின் கண்ணீர் புரிய வேண்டும். நீதி நியாயங்கள் சட்டவரை யறைகளுக்கு அப்பால் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது சமூகத்தின் சரித்திரங்களை அவர்கள் மானசீகமாக புரிந்து கொள்ள வேண்டும்.

பல நாடுகளிலும் பல இடங்களிலும் பிரச்சினைகள் இவ்வாறு இருந்தாலும் கூட எமது நாட்டையும் சமூகத் தையும் பொறுத்தவரையில் இவ்வாறான பிரச்சினைகள் மேலெழுவது துவண்டுபோன எமது சமூகத்தின் துளிகளை மீண்டும் விழிகளிற்குள் வரவழைப்பதாக மாறும். போர் இழப்புக்களால் மீண்டெழ முடியாத பல குடும்பங்கள் இன்றும் எமது சமூகத்தில் ஏராளம் இருக்கின்றன. இதன் நடுவே இவ்வாறான குழப்பங்களும் மேல் எழுந்தால் மீட்சி என்பதே எமது சந்ததிக்கு இல்லாது போய்விடும்.

சட்டத்தின் முன் வழங்கப்படும் தீர்ப்பைக் கண்டு சமூகக் குற்றவாளிகள் அஞ்ச வேண்டும். இதுவே பெரும்பாலும் வளர்முகநாடுகளில் முன்னெடுக்கப்படும் சட்டசீர்திருத்தங் களின் முக்கிய கருப்பொருளாக உள்ளது. அண்மையில் மயூரனுக்கு இந்தோனேசியா வழங்கிய தீர்ப்பு தவறானது என பல விமர்சனங்கள் கிளம்பியது. போதைக் குற்றவாளி கள் தொடர்பாக இந்தோனேசியா மேற் கொண்ட ஒப்பந்தத்தை மயூரனின் விடயத்தில் மீறுகின்றது என்று பல நாடுகள் கூறின.

சிறிய ஒரு நாட்டுக்குள் அதிலும் சிறுபான்மை இனமாக வாழுபவர்களுக்குள் எத்தனை யாயிரம் சமூகசீர்கேடுகள் இன்று மலிந்து விட்டன. மைத்திரி அரசின் ஆட்சியில் அரசியல் சீர்திருத்தங்கள் பல அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் மூலம் தமிழ் மக்களது அடிப்படைப் பிரச்சினைகளையும் நம்பிக்கையீனங்களையும் நிவர்த்தி செய்ய வேண்டிய சிறுபான்மை பிரதி நிதிகள் இன்று நாடாளுமன்றத்தில் கொட்டாவி விட்டு தலையசைக்கின்றார்கள்.

மறு துருவத்தில் வன்முறைக்கு எதிராக பகிஷ்கரிக்கும் எம்மவர்களும் வன்முறை வழிநின்றுதான் பகிஷ்கரிக்கின்றார்கள். கடைகளிற்கு கல்லெறிந்து மிரட்டி விரட்டி மேற்கொள்ளும் வன்முறைக்கு எதிரான குரல் குற்றத்தின் தண்டனைக்கு குறிவைக்கும் கோரிக்கையாக அமையுமா?... மானசீக முறையில் முன்னெடுக்கப்படாத கோரிக்கைகளெல்லாம் கேலிக்கூத்துக்களாகவே மாறும்.

எது எப்படி இருந்தாலும் இருக்கின்ற சட்டங்களைக் கொண்டு குற்றவாளிகளை குறைக்கின்ற சமூகப் பொறுப்பை சட்டவல்லுநர்கள் அடிமனதில் நிலைநிறுத்தி தமது கடமைகளை முன்னெடுக்க வேண்டும். மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதே இந்த பகிஷ்கரிப்புக்கள் ஆர்ப்பாட்டங்களின் அடிப்படையாகும். தொடர்ந்து நடைபெற்று வரும் பாரிய குற்றங்களில் இருந்து குற்றவாளிகள் தப்பிக்கொண்டதே அடிப்படையாகும்.

சிறையடைக்கப்படும் சந்தேகநபர்கள் பிணை என்கின்ற பெயரில் விடுவிக்கப்படுவதும், வழக்கின் தீர்ப்பு வாய்தா ஆவதால் மீண்டும் குற்றவாளிகள் புதுப்பொலிவு பெறுவதும், இன்றைய குற்றவாளிகளிற்கு சாதகமான விடயமாகின்றன. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற குற்றத்திற்கு 2014ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்ட தென்றால் சந்ததி கடந்த சாட்சியங்கள் சில வேளைகளில் சட்டத்தின் முன் தவறாகின்றன.

ஆகவே மக்களின் உள்ளக்கிடக்கைகளை அவதானித்து சமூகப்பொறுப்புடனும் சட்டப்பொறுப்புடனும், சட்ட வல்லுநர்கள் தீர்ப்பளிக்க வேண்டும். அதேசமயம் சட்டச்சிக்கல்களை அரசியல் வாதிகள் அரசியல் சீர்திருத்தங்களில் கண்காணிக்க வேண்டும், இளைய சமூகத்திற்கு நம்பிக்கையளிக்கக்கூடிய விதமாக பொறுப்புநின்று செயற்பட முன்வரவேண்டும் என்பதும் இன்று மக்களின் மத்தியில் இருந்து வரும் குரலாகும்.

மனிதனுக்கு ஆறாவது பொக்கிஷம் ஆண்டவனால் அள்ளி வழங்கப்பட்டதன் அர்த்தம் அடுத்தவனை துன்பப்படுத்தி பார்ப்பதற்கல்ல. புல்லாய் பூடாய் புழுவாய் மரமாகி பல்மிருகமாகி பாவம் தீர்க்க வந்த இந்த பிறப்பை பாரி னுள் மனிதன் போட்டுடைக்கின்றான் என்பதை பட்டினத்தார் அழகாக பாடுகின்றார் **‘நந்தவனத்தில் ஓர் ஆண்டி நாலாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டு வந்தான்டி ஒரு தோண்டி அதை கூத்தாடி கூத்தாடி போட்டுடைத் தாண்டி’** நாலும் ஆறும் மொத்தம் பத்து மாதமாய் தவமிருந்து பெற்ற பெறுதற்கரிய இந்த பிறவியை வாழத் தெரியாமல் கூத்தாடி கூத்தாடி போட்டுடைக்கின்றான்.

**● வெண்கட்டியன்**

---

# வல்லை - அராலி வீதியை முழுமையாக விடுவிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வலியுறுத்துகிறார் டக்ளஸ்



வலிகாமம் வடக்கு பகுதியில் அமையப்பெற்றுள்ள வல்லை - அராலி வீதியின் எஞ்சியுள்ள சிறு பகுதியினை விடுவிக்க இராணுவத்தினருக்கு அரசு அறிவிக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள செயல்ாளர் நாயகம்,

வல்லை - அராலி வீதி மக்கள் பாவனைக்காக கடந்த காலத்தில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் இன்னும் சிறு பகுதி இராணுவத்தின் வசமே உள்ளது.

கடந்த காலங்களில் நாம் முன்னெடுத்த முயற்சிகளின் பயனாக வலி. வடக்குப் பகுதியில் பல இடங்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும், மக்கள் பாவனைக்காக இன்னும் பல இடங்கள் இங்கு விடுவிக் கப்படாதுள்ளன. இது தொடர்பில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அதிலும் இவ் வீதியானது, பருத்தித்துறை வாழ் மக்கள் அங்குள்ள காச நோய் மருத்துவ மனைக்குச் செல்லும் பிரதான வீதியாகும்.

அதனை மக்கள் பாவனைக்கு விடாததன் காரணமாக, அம் மக்கள் சுமார் 30 கிலோ மீற்றர் சுற்றியே மருத்துவமனைத் தேவைகளுக்கு வர வேண்டியுள்ளது.

எனவே, இதனை அவதானத்தில் கொண்டும், இப் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் வசதி கருதியும், இவ் வீதியை விடுவிக்க இராணுவத் தினருக்கு அறிவிக்குமாறு டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள் ளார்.

---

# யானைகள் தொல்லை மக்கள் சிரமத்தில்

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பொன்னகர் பகுதியில் காட்டு யானைகள் இரவு வேளைகளில் பொதுமக்களின் தென்னந்தோட்டங்கள் மற்றும் வாழைத்தோட்டங்களுக்குள் புகுந்து நாசம் செய்து வரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் சொத்திழப்புக்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பகுதியில் உள்ள அரியகுட்டி பவுணன் என்பவரது தோட்டத்திற்குள் நுழைந்த யானைகள் பல இலட்சம் ரூபா பெறுமதியான தென்னை மரங்களை நாசம் செய்ததாகவும் நாளாந்தம் தாம் யானைகளுடன் போராட வேண்டி உள்ளதாகவும் தோட்ட உரிமையாளர் தெரிவித்தார். எனவே குறித்த அதிகாரிகள் இது தொடர்பாக கவனத்திலெடுத்து காட்டு யானைகளை ஊருக்குள் வராமல் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(125)

---

# தலுவில் வீதியை புனரமைக்க தவிசாளரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி வடக்கு தலுவில் வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவிற்கு மோசமாக பாதிப்படைந்துள்ளது.

மேற்படி வீதி சுமார் 40 வருடங்களுக்கு மேல் மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரித்தான பிப்பிலி வீதியையும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான சங்கரத்தை வட்டுக்கோட்டை வீதியை இணைக்கும் இணைப்பு வீதியாக நவாலி வடக்கு தலுவில் வீதி காணப்படுகிறது.


விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலை விரிவுரையாளர்கள், அரச அதிகாரிகள் எனப் பலர் தினமும் இந்த தலுவில் வீதியை முழுமையாக பயன்படுத்துகின்றனர்.

பிரதேச சபைக்கு கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் கோரிக்கை விடுத்து மக்கள் பங்கேற்புத் திட்டத்திலும் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வீதிக்கு முன்னுரிமை வழங்கி புனரமைக்க வேண்டும் என நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (92)

# மனைவியை பிரிய மனமில்லாத ரெய்னா





சென்னை அணியின் புதுமாப்பிள்ளை ரெய்னா, தனது மனைவி பிரியங்கா சௌத்ரியை பிரிந்து இருக்க முடியவில்லை என டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

தற்போது ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடி வரும் இந்திய வீரர் ரெய்னாவுக்கு கடந்த மாதம் ஏப்ரல் 3ஆம் திகதி திருமணம் நடந்தது.

திருமணம் ஆன கையோடு புதுமாப்பிள்ளை ரெய்னா, ஐ.பி.எல் போட்டிக்கு விளையாட வந்துவிட்டார்.

இந்நிலையில் மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் நேற்று முன்தினம் பிரியங்கா சௌத்திரி படத்தை டுவிட்டரில் பதிவேற்றி "Can't wait to see u my love" என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து ரெய்னா என்னமா ரொமான்ஸ் பண்ணுகிறார் என்று ஒருவர் கருத்து தெரிவிக்க, இரசிகை ஒருவர் நான இன்னும் அழுது கொண்டிருக்கிறேன் ரெய்னா, என சரமாரியாக தங்களது கருத்துக்களை ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

# பெங்களூர்-சென்னை இன்று மோதல்

## வெளியேறியது ராஜஸ்தான்

(புனே)

ஐ.பி.எல் தொடரின் நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான ஆட்டத்தில் தகுதிகாண் சுற்றில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர அணியும் மோதிய போட்டியில் பெங்களூர் அணி வெற்றி பெற்றதுடன் ராஜஸ்தான் அணி வெளியேறியது.

புனே மகாராஷ்ட்ரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய கெய்ல் 27 ஓட்டங்களும், அணித்தலைவர் விராட் ஹோலி 12 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.



டிவில்லியர்ஸ் தலா 4 பவுண்டரி, சிக்சருடன் அரைச்சதம் கடந்து 66 ஓட்டங்களும், ஆட்டமிழக்காமல் மன்தீப் சிங் அரைச்சதம் கடந்து 54 ஓட்டங்களும் எடுத்தனர்.

20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு பெங்களூர் அணி 180 ஓட்டங்கள் எடுத்தது. ராஜஸ்தான் சார்பில் பந்துவீச்சில் தவால் குல்கர்னி 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதனையடுத்து 181 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 19 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து இத்தொடரிலிருந்து வெளியேறியது.

அதிகபட்சமாக அஜின்கியா ரஹானே 42 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் பெங்களூர் சார்பில் சிறீநாத் அரவிந்த், ஹர்ஷல் பட்டேல், டேவிட் வீஸ், யுஸ்வேந்திரா சாகல் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பெங்களூர் அணியின் டிவில்லியர்ஸ் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் பெங்களூர் அணி இரண்டாவது இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இதில் சென்னை அணிக்கெதிராக இன்று மோதவுள்ளது இன்று வெற்றிபெறும் அணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இறுதிப் போட்டியில் மும்பையுடன் மோதவுள்ளது.

# இரண்டு வருட இடைவெளியின் பின் இந்திய அணியில் ஹர்பஜன்

பங்களாதேஷ் தொடருக்கான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரின் முதல் போட்டி யூன் 10ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதற்கான இந்திய அணியை சந்தீப் பட்டேல் தலைமையிலான தெரிவுக்குழு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதில் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், டெஸ்ட் அணியில் இடம்பெற்றுள்ளார். இவர் கடைசியாக, கடந்த 2013இல் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஹைதராபாத்தில் நடந்த டெஸ்டில் விளையாடினார்.



டோனி டெஸ்டிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதால், விக்கெட் காப்பாளராக சகா அறிவிக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டியை விராட் ஹோலி வழிநடத்துகிறார்.

தவான், புஜாரா, ரோஹித், ரஹானே, அஷ்வின் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர். ஆனால் ஜடேஜாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**டெஸ்ட் அணி:**

ஹோலி (அணித்தலைவர்), முரளி விஜய், தவான், லோகேஷ் ராகுல், புஜாரா, ரஹானே, ரோஹித், சகா, அஷ்வின், ஹர்பஜன் சிங், கரண் சர்மா, புவனேஷ்வர், உமேஷ் வருண் ஆரோன், இஷாந்த்.

**ஒருநாள் அணி:**

டோனி (அணித்தலைவர்), ரோஹித், ரஹானே, தவான், ஹோலி, ரெய்னா, ராயுடு, அஷ்வின், ஜடேஜா, அக்சர் பட்டேல், புவனேஷ்வர், உமேஷ், மோகித் சர்மா, ஸ்டுவர்ட் பின்னி, குல்கர்னி.

# சிம்பாவேக்கு எதிரான தொடர் பாகிஸ்தான் அணி அறிவிப்பு

சிம்பாப்வே அணியுடன் ரி20 போட்டி தொடரில் மோதவுள்ள பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

வேகப் பந்துவீச்சாளர் முகமது சமி, சகலதுறை ஆட்டக்காரர் சொயிப் மாலிக் மீண்டும் இடம் பிடித்துள்ளனர். முகமது சமி (34 வயது) மூன்று ஆண்டு இடை வெளிக்குப் பிறகு தேசிய அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடைசியாக 2012இல் இலங்கை அணியுடன் நடந்த 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடி இருந்தார். பங்களாதேஷில் கடந்த ஆண்டு நடைபெற்ற உலக கோப்பை ரி20 போட்டித் தொடரில் விளையாடிய சொயிப் மாலிக், அதன் பிறகு புறக்கணிக்கப்பட்டு வந்தார்.

சமீபத்தில் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து இணைந்து நடத்திய உலக கோப்பை ஒருநாள் போட்டித் தொடருக்கும் அவர் சேர்க்கப்படவில்லை.

இந்த நிலையில், சிம்பாப்வே தொடருக்கான பாகிஸ்தான் அணியில் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதல் ரி20 போட்டி இன்றும், 2ஆவது போட்டி 24ஆம் திகதியும் நடக்க உள்ளன. இதைத் தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடக்க உள்ளது.

பாகிஸ்தான் ரி20 அணி: ஷாகித் அப்ரிடி (கப்டன்), சர்பராஸ் அகமது, அகமது ஷேசாத், முகமது ஹபீஸ், முக்தார் அகமது, நோமன் அன்வர், சொயிப் மாலிக், உமர் அக்மல், முகமது ரிஸ்வான், அன்வர் அலி, ஹம்மத் ஆஸம், இம்மத் வாசிம், பிலவால் பட்டி, வகாப் ரியாஸ், முகமது சமி.

# புதிய வாழ்வின் தொடக்கம் எதிர்பார்க்கும் ஆமிர்

இங்கிலாந்துக்கு எதிரான தொடரின் போது ஸ்பொட்-பிக்சிங்கில் ஈடுபட்டதால் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச போட்டியில் விள்ளயாடாத பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரின் தடைக்காலம் இந்த வருடத்தின் இறுதியில் முடிவடைகிறது.



அதன்பின் சர்வதேச அணியில் இடம்பிடிப்பது புதிய வாழ்க்கையின் தொடக்கமாகும் என்று முகம்மது ஆமீர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மொகமது ஆமீர் கூறுகையில், இங்கிலாந்துக்கு எதிராக ஸ்பொட்-பிக்சிங்கில் ஈடுபட்ட விவகாரத்தில் தடைபெற்ற பின்னர் பல்வேறு கட்டங்களில் கிரிக்கெட்டில் இருந்து விலகி விடலாமா? என்று நினைத்தேன், ஆனால், உள்ளூர் போட்டிகளில் இரசிகர்கள் கொடுத்த அதீத ஆதரவால் மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாட வேண்டும் என்று என்னை ஊக்குவித்தது.

மீண்டும் கிரிக்கெட் விளையாடுவது எனது புதிய வாழ்வின் தொடக்கம் என்பதை நான் கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டும். சர்வதேச அணியில் வாய்ப்பு பெற நான் அதிக அளவு முயற்சி செய்வேன். பாகிஸ் தான் அணிக்காக விளையாடத் தயாராக இருக்கிறேன்.

பாகிஸ்தான் அணிக்கு திரும்பிய பிறகு ரசிகர்கள் கொடுக்கும் ஆதரவைப் பார்ப்பதற்காக காத்துக்கொண்டிருக்கிறேன். அது உண்மையிலேயே என்னை ஊக்குவிப்பதாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# இன்றைய ஆட்டம்

## இறுதிப் போட்டி இரண்டாம் சுற்று




சென்னை

எதிர்

பெங்களூர்

இடம்- ராஞ்சி

நேரம்- இரவு 8 மணி

# வில்லியர்சின் பெருந்தன்மை

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியில் டிவில்லியர்சுக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. அந்த விருதை அவர் மன்திப் சிங்கிக்கு வழங்கினார்

இப் போட்டியில் பெங்களூர் ராஜஸ்தான் றோயல்சும் மோதின இதில் பெங்களூர் அணி 2 விக்கெட்டுக்கு 46 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தபோது ஜோடி சேர்ந்த டிவில்லியர்ஸ் மன்தீப்சிங் ஜோடி அதிரடியாக விளையாடியது. அவர்கள் இருவரும் 113 ஓட்டங்கள் சேர்ந்தனர். இதனால் பெங்களூர் 180 ஓட்டங்கள் குவித்தது.


டிவில்லியர்ஸ் 66 ஓட்டங்கள் (38 பந்து, 4 பவுண்டரி, 4 சிக்சர்), மன் தீப்சிங் 54 ஓட்டம் (34 பந்து, 7 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தனர்.

இதுகுறித்து வில்லியர்ஸ் கூறுகையில், மன்தீப்சிங் ஆட்டம் தான் ஆட்டநாயகன் விருதுக்கு உரியது. அந்த விருது அவருக்கு தான் செல்ல வேண்டும். அடுத்த போட்டியில் சென்




னையை எதிர் கொள்கிறோம். அவர்களுக்கு எதிராக எப்படி விளையாட வேண்டும் என்பதை அறிவோம் என்றார்

# பாலியல் இலஞ்ச அறிக்கை அமைச்சரிடம் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தேசிய தேர்வாளர்கள், வீராங்கனைகளிடம் பாலியல் இலஞ்சம் பெற்றதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலான அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை முன்னாள் நீதியரசர் நிமல் திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் அமைச்சரிடம் கையளித்தனர்.

இலங்கை மகளிர் அணியில் இடம்பெற்ற வீராங்கனைகளிடம் தேசிய தேர்வாளர்கள், அணியில இடம்பிடிப்பதற்காக பாலியல் இலஞ்சம் கோரினர் என்ற குற்றசசாட்டு ஊடகங்களில் வெளியான போது அது தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்தன.

இதனையடுத்து 2014ஆம் ஆண்டு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயினால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

# சிறிலங்கா கிரிக்கெட்டில் குறுகிய காலப்பகுதியில் பலவற்றை நிறைவேற்ற வேண்டும்



சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் இடைக்கால நிர்வாக சபை தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறுகிய காலத்தில் பல விடயங்களை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்கொண்டுள்ளது.

எனினும் இந்த விடயங்கள் யாவற்றையும் ஒரு சவாலாக எதிர்கொண்டு நிறைவேற்றுவதற்கு இடைக்கால நிர்வாக சபை உறுதி பூண்டுள்ளது. என சிறிலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் சிதத் வெத்தமுனி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

விளையாட்டுத்துறை அமைசசர் நவீன் திசாநாயக்கவினால் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை, வியைாட்டுத்துறை நிர்வாகத்தில் பல மாற்றங்களை செய்துள்ளதுடன் இன்னும் பல விடயங்களை அறிமுகப்படுத்துவதற்கான யோசனைகளை அண்மையில் வெளியிட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்தக் குறுகிய காலத்தில் நேர்மையானதும் செயற்றிறன் மிக்கதுமான தீர்மானங்களை இடைக்கால நிருவாக சபை எடுக்கும்.

அத்துடன் பொறுப்பு வாய்ந்தவர்களின் ஒத்துழைப்பையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அவர்களது ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் யாருக்கும் பயன் கிட்டாமல் போய்விடும்.

எம்மாலும் ஒன்றும் செய்யக் கூடியதாக இருக்காது என்றார.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் போட்டித் தன்மை அதிகரித்துள்ளதால் எமது கிரிக்கெட் கட்டமைப்பை சீர் செய்து அதி சிறந்த வீரர்களை உருவாக்கவேண்டும்.

மஹேல் ஜயவர்தன முன்வைத்துள்ள யோசனைகள் சிறப்பானவை.

அந்த யோசனைகளை நிறைவேற்றினால் கிரிக்கெட் உலகில் உயர் நிலையை நாம் அடையமுடியும்.

நாட்டின் நலனுக்காக இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் 19ஆவது திருத்தச் சட்டம் சில திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைப் போன்று கிரிக்கெட் மீது ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்து தரப்பினரும் கிரிக்கெட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைய வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.


## கே.சி.சி.யை வீழ்த்தி வென்றது பற்றீசியன்

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடாத்தி வரும் கூடைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

பற்றீசியன், விளையாட்டுக்கழக அணியும் கொக்குவில மத்திய விளையாட்டுக்கழக அணியும் மோதிய இந்தப் போட்டி கடந்த செவ்வாய்க் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் மாறிமாறிப் புள்ளிகள் பெற்ற வண்ணம் இருந்தன. எந்த அணி வெற்றி கொள்ளும் என ஊகிக்க முடியாத நிலையில் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆட்டநேர முடிவில் பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி 74:73 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது

(93)



14 வயதுக்குட்பட்டோருக்கான இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணியில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி வீரர் சி.ஏ.ஜேனுசன்,தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் ஜி.கஜானன் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இவர்கள் அடுத்த வாரம் கஜகஸ்தானுக்கு செல்லவுள்ளனர் இதில் கஜானன் கடந்த வருடமும் இந்தியாவிற்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மேதைகள் கிரிக்கெட் மஹேலவிற்கும் அழைப்பு

கிரிக்கெட் உலகின் துடுப்பாட்ட சாதனை நாயகன் சச்சின் டெண்டுல்கர், சுழல்பந்து வீச்சு நாயகன் ஷேன் வோர்ன் ஆகிய இருவரால் பிரேரிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மேதைகளுக்கான (லெஜென்ட்ஸ்) இருபது 20 போட்டிகளில் விளையாடுவதற்கு இலங்கையின் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன அழைக்கப்பட்டுள்ளார்.

சச்சின் மற்றும் வோர்ன் ஆகியோரினால் பிரேரிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மேதைகளின் ரி 20 கிரிக்கெட் போட்டிளுக்கான முதலாம் அத்தியாயம் ஐக்கிய அமெரிக்காவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிரிக்கெட் விளையாட்டின் மீது ஆர்வம் இருந்தும் போட்டிகளை நேரில் கண்டு இரசிக்கும் அதிஷ்டம் இல்லாதவர்கள் மத்தியில் இப்போட்டிகளை நடத்தி அதன மூலம் கிரிக்கெட் விளையாட்டை உலகம் முழுவதும் பிரபல்யம் அடையச் செய்வதே டெண்டுல்கரினதும் வோர்னினதும் குறிக்கோளாகும்.

கனடா, சிங்கப்பூர், ஹொங்கொங், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலும் இப்போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சர்வதேச கிரிக்கெட் விளையாட்டிலிருந்து முழுமையாக ஓய்வு பெற்றுள்ள 28 வீரர்களை ஒரு போட்டிக்கு தலா 25,000 டொலர்கள் வீதம் ஒப்பந்தம் செய்வதற்கு டெண்டுல்கரும் வோர்னும் முன்வந்துள்ளனர்.

இப்போட்டி தொடர்பாக தங்களுக்கு எதுவும் அறியக் கிடைக்கவில்லை என கிரிக்கெட் அவுஸ்ரேலியாவும் சர்வதேச கிரிக்கெட் பேரவையும் குறிப்பிட்டுள்ளன.

எனினும் ஓய்வுபெற்ற வீரர்கள் பங்குபற்றும் இப்போட்டிகளை யார் நடத்தினாலும் அது தவறாகாது- என பிரைட் லீயின் முகாமையாளர் நீல் மெக்ஸ்வெல் குறிப்பிட்டார்.



இப் போட்டியில் ஓய்வுபெற்ற சர்வதேச கிரிக்கெட் வீரர்களான பிரெட் லீ, மெத்யூ ஹைடன், அடம கில்கிறிஸ்ட், ரிக்கி பொண்டிங், ஜக் கலிஸ், முத்தையா முரளிதரன், அலன் டொனல்ட், சஹீத் அப்ரிடி, அனில் கும்ப்ளே, சௌரவகங்குலி, வீ. வீ. எஸ். லக்ஷ்மன் உட்பட இன்னும் பல கிரிக்கெட் பிரபலங்கள் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# டோனிக்கு அபராதம்

ஐபிஎல் போட்டியில் நடுவ்ருடன் தீர்ப்புக்கு எதிராக கருத்து தெரிவித்ததாக சென்னை அணித்தலைவர் டோனிக்கு ஊதியத்தில் இருந்து 10 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் முதல் சுற்றுப்போட்டியில் மும்பை அணி சிறப்பான ஆட்டத்தால் சென்னையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியில் சென்னை அணி துடுப்பெடுத்தாடும் போது, மலிங்க வீசிய முதல் ஓவரின் 4ஆவது பந்தில் தொடக்க ஆட்டக்காரர் ஸ்மித் எல்.பி. டபிள்யூ. முறையில் வெளியேற்றப்பட்டார்.



117.4 கி.மீ வேகத்தில் மலிங்க வீசிய அந்தப் பந்து ஸ்டம்பில் படாமல் லெக் ஸ்டம்பில் இருந்து விலகிப் போவது ரீப்ளேயில் நன்றாக தெரிந்தது.

இதனால் கடுப்பாகிப் போன டோனி போட்டி முடிந்து பேட்டியளிக்கையில், ஸ்மித் துக்கு வழங்கப்பட்ட எல்.பி. டபிள்யூ, முடிவு மோசமானது என்றும். இதனை எங்களால் மறக்க இயலாது எனவும் கருத்து தெரிவித்தார்.

டோனியின் இந்த கருத்து. ஐ.பி.எல் விதிப்படி குற்றமாகும் எனவே டோனிக்கு போட்டிக்கான ஊதியத்தில் இருந்து 10 சதவீதம் அபராதமாக விதிக கப்பட்டுள்ளது.

# ஒரு காலத்தின் துயரை மரணங்களை நினைவுகூரல்

– சுகு–ஸ்ரீதரன் –

யுத்தம் முடிவடைந்து 6 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இந்த யுத்தம் - உயிரழிவினூடாக நாம் பெற்றதென்ன? இந்த யுத்தத்தில் தமிழர் தரப்பில் இருந்த சரி பிழைகள் பற்றி நாம் சிந்தித்திருக்கிறோமோ?

இத்தனை உயிரிழப்புக்கள் நிகழ்ந்தது பற்றி மனக்கிலேசம் ஏதாவது இருக்கிறதா?

எதைச் செய்யலாம் அல்லது எதைச் செய்யக் கூடாது, எவ்வாறு போராடுவது என்ற புரிதல் தன்னும் ஏற்பட்டிருக்கிறதா?

தமிழ் மக்களின் அல்லது சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகள் பற்றிய திட்டங்கள் ஏதாவது எம்மிடம் இருக்கிறதா?

சமூகங்கள் இணங்கி இசைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறதா?

இதில் குடும்பம் - உற்ற சுற்றம் - மற்றும் எல்லாவற்றையும் இழந்தவர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் பற்றிய ஆக்க பூர்வமான தொலைநோக்கு நிலைப்பாடுகள் எதுவும் இருக்கிறதா?

இந்த அழிவிலிருந்து எவ்வாறு மீள்வது? புலம்பெயர்ந்தவர்கள்- நாட்டில் உள்ளவர்கள் -வெவ்வேறு சமூகங்கள் சமத்துவமாக இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கும் அக்கறை இருக்கிறதா?

இளம் தலைமுறை இங்கு வாழ்வதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது.

வன்முறை கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவர நல்லியல்புள்ள சமூகத்தை உருவாக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது.

பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான முயற்சிகள் எதுவும் இருக்கிறதா?

அதிகாரத்திற்கு வந்தவர்கள் தமிழ்



பாரம்பரிய நிலப்பிரபுத்துவ அதிகாரத் தோரணையை விட வேறு எதையாவது கொண்டிருக்கிறார்களா?

அரசு -சர்வதேச -புலம்பெயர் சமூக வளங்களை உள்ளூர் வளங்களுடன் இசைவாக்கி சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும், ஜனநாயக பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும்,

முதலீடுகள் -வேலைவாய்ப்புக்கள்- சமூக பாதுகாப்பு என்பவற்றை நிலை நாட்டுவதற்கும் எத்தனையோ வாய்ப்புக்கள் இருக்கின்றன.

யுத்தத்தில் இறந்த உறவுகளை நினைவு கூருவது இழப்புக்களை சந்தித்த அனைவருக்கும் இயல்பான உரிமை.

குறிப்பாக 3 தசாப்தங்களுக்கு மேலாக நிலவிய யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்து மக்களும் நினவு கூரப்படவேண்டும்.

இதில் தீண்டாமை பாராட்டப்பட முடியாது.

யுத்தத்தின் இறுதி நாட்களில் கொல்லப்பட்டவர்கள் மாத்திரம் என்பது 30 ஆண்டு கால யுத்தம் பேரழிவுகள் தொடர்பான விரிந்த பார்வை இல்லாத -மனித உரிமைகள் ஜனநாயக விரோத செயற்பாடுகள் தொடர்பாக குறைபாடானதொரு நிலைப்பாடாகும்.

எவ்வளவு பிரமாண்டமான விலை செலுத்தப்பட்டது என்பது உணரப்படவேண்டும்.

இந்த விலையின் சமூகப் பலாபலன்கள் என்ன என்பது சிந்திக்கப்படவேண்டும்.

சமூகங்களிடையே நல்லெண்ணத்தை உருவாக்குவதும், சமத்துவமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும், மனித உரிமை, சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றை உயர்த்திப் பிடிப்பதுமே நாம் இவர்களுக்குச் செய்யக் கூடிய அஞ்சலியாக இருக்கும்.

பேரழிவுகள் பாடமாக இருக்க வேண்டும். இனிமேலும் இத்தகைய அழிவுகள் நிகழாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி பொறுப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும்.

இழப்புக்களைச் சந்தித்தவர்களின் துயரங்களைப் புரிந்து கொள்ள முயல வேண்டும்.

பழி உணர்ச்சிக்கு மாற்றாக சுதந்திரம், ஜனநாயகம், பொருளாதார சமத்துவம் என்பவற்றை உறுதி செய்யும் விதமாகச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

மக்களின் வாழ்வின் அனர்த்தங்கள் நினைவு கூரப்படும்போது வன்முறை மயப்பட்ட தலையீடுகள் இருக்கக் கூடாது.

3 தலைமுறைகளுக்கு நிகழ்ந்த அழிவும் ஊரை நிசப்தமாக்கிவிட்ட இடம்பெயர்வும், புலம்பெயர்வும் ஆழமான சிந்தனைக்குரியது. ஊர் வாழ்க்கையிலிருந்து தனிமைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அல்லது வெறிச் சோடிக் கொண்டிருக்கிறது. வன்முறை, பாலியல் பலாத்காரம், படுகொலைகள் தலைதூக்கியிருக்கின்றன.

எதையெல்லாம் இழந்தோம் என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இனிமேலும் இத்தகைய இழப்புக்கள் ஏற்படாமல் தடுக்க நல்லியல்புடன் வாழ்வதற்கான சாத்தியம் பற்றி சிந்திக்க வேண்டும்.

துரோகிகள் என்றும் தியாகிகள் என்றும் முத்திரையிடப்பட்டு கொல்லப்பட்டவர்கள், சகோதர இன சமூகங்களின், அவர்களின் உறவுகளின் படுகொலை-மரணங்கள் துயரங்களையும் சிந்திக்க வேண்டும்.

அர்ப்பணத்துடன் போராட வந்த ஒரு பகுதியினர் தம்மைத்தாமே சமூகத்தின் அதிகாரமாக நிறுவிக் கொண்டவர்களால் துரோகிகள் ஆக்கப்பட்டு கொன்றழித்தார்கள்.


எமது சமூக ஆதிக்க மன நிலையும் அப்படித்தான் இருக்கிறது.

இவ்வாறான பிரிவினையிலேயே இறந்தவர்களை நினைவு கூருவதற்கான தார்மீக யோக்கியதையை சமூகம் இழந்து விடுகிறது.

அதிகார சக்திகளின் அபிலாசைகளுக்கேற்ப சாதாரண மனிதர்களின் உயிர்களின் பெறுமதியைத் தீர்மானித்து விடமுடியாது.

---

வாரிஸ் டைரி! உலகின் முன்னணி ஆபிரிக்க மொடல் அழகி, லாரா ஸிவ், உலகின் முன்னணி ;பாஷன் பத்திரிகையான "மேரி க்ளேய்ர்" நிருபர், வாரிஸ், தன் கதையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.




1

# "தொடைகளுக்கு நடுவே ஒளிந்திருக்கும் நரகம்" - 3000 ஆண்டுகால கறுப்பின அடிமை வரலாறு!

"சோமாலியாவில், கரடுமுரடான ஒரு பாலைவனக் கிராமத்தில்தான் நான் பிறந்தேன். எங்களது நாடோடிக் குடும்பம். இங்குள்ள பாத்ரூமைவிட மிகச் சிறியது எங்கள் குடிசை. பசுமையே பார்த்திராத கண்கள் என்றாலும், எல்லா குழந்தைகளையும்போல நானும் சந்தோஷமாகத்தான் இருந்தேன். ஆடு மாடுகளை மேய்ப்பேன். வரிக்குதிரைகளோடு ஓடுவேன். ஒட்டகச்சிவிங்கிகளை துரத்துவேன். பாட்டுப் பாடுவேன்.

ம்ஹ்ம்... இந்த சந்தோஷமெல்லாம் கொஞ்ச நாட்களுக்குத்தான். எனக்கு மட்டுமில்லை. சோமாலியாவில் பிறந்த எல்லா பெண்களுக்குமே இப்படித்தான்.

ஆ.்.ப்ரிக்காவைப் பொறுத்தவரை பெண்கள்தான் எல்லாமே. ஆண்களைவிட அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். வீட்டு வேலைகளையும் பார்த்துக் கொள்கிறார்கள். ஆனால், என்ன செய்து என்ன? எந்த உரிமையும் அவர்களுக்கு கிடைப்பதில்லை. காலம் முழுக்க ஆண்களுக்கு அடிமையாக இருந்தே சாகவேண்டும்.

எங்களது நாடோடிக் குடும்பமில்லையா? அங்கே, "கல்யாணமாகாதவள்" என்கிற பேச்சுக்கே இடமில்லை. பாடையோ, பரதேசியோ! எவன் கையிலாவது எங்களை பிடித்துக் கொடுத்துவிடவேண்டும். அதுவும் கன்னித் தன்மையோடு. அதுதான் அவர்களின் வாழ்க்கை இலட்சியம். பெண்களைப் பொறுத்தவரை, சோமாலியர்களின் ஞானம் மிகவும் வித்தியாசமானது. எல்லா கெட்ட விஷயங்களும் பெண்களின் தொடைகளுக்கு நடுவில் ஒளிந்து கிடப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் செய்கிற அக்கிரமம் இருக்கிறதே...

அப்போது, எனக்கு ஐந்து வயது இருக்கும். ஒரு சாயங்கால நேரம்.

அம்மா என்னிடம் வந்து, "உங்கப்பா, மருத்துவச்சியை பாக்கப் போயிருக்கிறார். அந்தப் பொம்பிளை எப்ப வேணுமானாலும் வீட்டுக்கு வரலாம்" என்றார்.

அன்றைக்கு, என்றும் இல்லாத கவனிப்பு எனக்கு. போதுமான அளவுக்கு சாப்பிடக் கொடுத்தார்கள்.

"பாலையும் தண்ணியையும் அதிகம் குடிச்சிடாதையடி" -அம்மா அறிவுரை சொன்னாள்.

சாப்பிட்டு முடித்து, போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு சந்தோஷமாக படுத்தேன். முழிப்பு வந்தபோது, வானம் இருட்டாக இருந்தது. மீண்டும் படுத்துவிட்டேன்.

"வாரிஸ்"

அம்மா திடீரென்று எழுப்பினாள்.

நாங்கள், தூரத்தில் தெரிந்த குன்றை நோக்கி நடக்க ஆரம்பித்தோம்.

"இப்படி உக்காருவோம். அவ வருவா." என்றார் அம்மா.

வானம் நன்கு விடிந்திருந்தபோது, "சர்க், சர்க்" என்று செருப்பு சத்தம் கேட்டது. மருத்துவச்சி வந்துவிட்டிருந்தாள்.

படுக்கை மாதிரி இருந்த ஒரு பாறையைக் காட்டி, "அங்க போய் உட்கார்" என்றாள். அம்மாதான் என்னை பாறை மேல் படுக்க வைத்தார்கள். அங்கே, பேச்சுக்கே இடமில்லை. என்னை படுக்க வைத்துவிட்டு.. அம்மா, என் தலைக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டாள். என் தலையை இழுத்து அவள் மடியில் வைத்துக்கொண்டு, தன் கால்களை எடுத்து என் கைகள் மீது போட்டாள். நான் அம்மாவின் தொடைகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டேன்.

பிறகு ஒரு மரத்துண்டை எடுத்து என் வாயில் வைத்தாள்.

"இறுக்கமா கடிச்சுக்கொள். அம்மாவை பார். எவ்வளவு தைரியமா இருக்கிறேன். அதுபோல நீயும் இருந்தா, உடனே முடிஞ்சிடும்."

நான் கீழ குனிந்து என் கால்களுக்கு நடுவில் பார்த்தேன். பழைய கைப்பை ஒன்றை வைத்துக்கொண்டு அந்த மருத்துவச்சி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கண்ணில் அப்படியொரு பேய்த்தனம்.

பைக்குள், தன் விரல்களைவிட்டு அரக்கப் பரக்க எதையோ தேடினாள். இறுதியாக ஒரு ரேசர் பிளேடு வந்தது. ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்பது மட்டும் புரிந்தது.

பிளேடின் ஓரங்கள் காய்ந்துபோய், இரத்தக்கறை



# ஒஸ்கார் விருது

ஒருமுறையாவது ஒஸ்கார் விருது வாங்கிவிட வேண்டும் என்பதுதான் ஹொலிவுட் நட்சத்திரங்களின் கனவு. ஆனால் பலமுறை ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டும் விருதே கிடைக்காத நட்சத்திரங்களின் பட்டியல் இதோ:

1. பீட்டர் ஓ ரூல் – 8 முறை
2. ரிச்சர்ட்.பேர்ட்டன் – 7 முறை
3. கிளன் குளோஸ் – 6 முறை
4. சிகோர்னே வீவர் – 3 முறை
5. ஜொனி டெப் – 3 முறை
6. ரொம் குரூஸ் – 3 முறை
7. வில் ஸ்மித் – 2 முறை
8. எட்வேர்ட் நோர்ட்டன் – 2 முறை
9. ஜ/டி கார்லண்ட் – 2 முறை
10. ஜேம்ஸ் டீன் – 2 முறை
11. ஹரிசன் ஃபோர்ட் – 1 முறை
12. சாமுவேல் எல் ஜாக்சன் – 1 முறை

# பேஸ்புக் நேசக்கரம்

உலகில் எந்த மூலையில் பேரிடர் உலுக்கினாலும் சரி, தேடியந்திரமான கூகுள் அந்தப் பகுதியில், பேர்சன் ஃபைண்டர் சேவையை அறிமுகம் செய்வதை வழக்கமாக கொண்டிருக்கிறது. எளிமையான இந்த தளம் பேரிடர் பாதிப்பில் இருந்து தப்பியவர்கள் மற்றும் மீட்கப்பட்டவர்கள் பற்றிய தகவல் தெரிவிக்கவும், அதே போல பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களின் பாதுகாப்பு பற்றிய தகவலைக் கோரவும் உதவுகிறது.

நேபாளத்தைப் பூகம்பம் உலுக்கிய போதும் கூகுள் அந்நாட்டுக்காக பேர்சன் ஃபைண்டர் இணையத்தளத்தை அமைத்துக் கொடுத்தது. ஹெய்ட்டியை உலுக்கிய பூகம்பத்தில் இருந்து கூகுள் இந்தச் சேவையை பேரிடர் காலங்களில் வழங்கி வருகிறது. சமீபகாலங்களில் சமூக வலைப்பின்னல் சேவையான ஃபேஸ்புக்கும் இதே போல பேரிடர் பகுதிகளில் நேசக்கரம் நீட்டி வருகிறது.

நேபாள பூகம்ப பாதிப்பின்போது, ஃபேஸ்புக் சேஃப்டி செக் எனும் வசதியை அறிமுகம் செய்தது. அடிப்படையில் இது நான் நலமாக இருக்கிறேன் என்று தெரிவிப்பதற்கான நிலைத்தகவல் வசதி. பேரிடர் காலங்களில் நெருக்கமானவர்கள் என்ன ஆயிற்றோ என்று நெஞ்சம் துடிக்கும் அல்லவா? அதேபோல நலமாக இருப்பவர்கள் அந்த தகவலை தங்கள் நட்பு வட்டத்தில் பகிர்ந்து கொள்ளவும் துடிப்பார்கள் அல்லவா? இதை எளிதாக பகிர்ந்து கொள்ள ஃபேஸ்புக் இந்தச் சேவை மூலம் வழி செய்கிறது.

நீங்கள் பூகம்பம் (பேரிடர்) பாதித்த பகுதியில் இருப்பதாக அறிகிறோம், உங்கள் நலனை பகிர்ந்து கொள்ளுங்கள் எனும் வாசகம் பேரிடர் பாதிப்புக்குள்ளான பகுதியில் உள்ள ஃபேஸ்புக் பக்கத்தில் தோன்றும். அதை கிளிக் செய்து பாதுகாப்பாக இருப்பதை மற்றவர்களுக்கு உறுதி செய்து கொள்ளலாம்.




நேபாள பூகம்பத்தின்போது 70 இலட்சம் பேர் இந்தச் சேவையைப் பயன்படுத்தி தாங்கள் நலமாக இருப்பதை நண்பர்களுக்கு உறுதி செய்ததாக ஃபேஸ்புக் தெரிவித்துள்ளது.

இதுதவிர ஃபேஸ்புக் நிதி திரட்ட உதவும் பட்டன் மூலம் பயனாளிகளை நிதி அளிக்க வைத்து அதற்கு ஈடாக தானும் நேபாளத்துக்கு நிதி திரட்டிக்கொடுத்துள்ளது.

பேரிடர் காலங்களில் தொழில்நுட்பம் எந்த அளவுக்கு கைகொடுக்கும் என்பதற்கு இவை எளிய உதாரணங்கள்!

படிந்திருந்தன.

"த்துப்.."

பிளேடின் மீது எச்சில் துப்பினாள் மருத்துவச்சி. அதை, தன் துணியில் துடைத்தாள். அவள் துடைத்துக்கொண்டிருக்கும்போதே, அம்மா தன் கைகளை எடுத்து என் கண்களை மூடினாள்.

நான், உலகமே இருண்டதுபோல் உணர்ந்தேன்.

அடுத்த நொடி...

"பர்ர்க்" என்று ஒரு சத்தம்.

படக்கூடாத இடத்தில் பிளேட் பட்டு, என் சதை கிழிவது நன்றாகத் தெரிந்தது. எந்தக் காலத்து பிளேடோ? துருப்பிடித்து, பற்களோடு இருந்திருக்கவேண்டும். நரநரவென்று மேற்கொண்டு முன்னும் பின்னுமாக இழுத்தாள் அந்தக் கிழவி.

"அய்யோ...!" -நரக வேதனை.

அசையக்கூடாது. அசைந்தால், வலி இன்னும் கொடூரமாகும். பற்களைக் கடித்துக்கொண்டு படுத்துக்கிடந்தேன். என் தொடைகள் நடுங்கின.

"கடவுளே! இந்த நரகத்திலிருந்து என்னைக் காப்பாற்ற மாட்டாயா?"

ஒரு வழியாக அம்மா என் கண்களை விடுவித்தாள். வெளிச்சத்துக்கு பழகியதும் பார்க்கிறேன். அந்த கிழவியின் அருகில் அக்கேசியா மரத்தின் முட்கள். குவியல் குவிய லாகக் கிடந்தன. அவள் கைகள் முழுக்க இரத்தம். அக்கேசியா முட்களைத்தான் ஒவ்வொன்றாக என் பிறப்புறுப்பில் குத்தியிருக்கிறாள். பிறகு கடினமாக வெள்ளை நூல் கொண்டு உறுப்பை தைத்திருக்கிறாள்.

சிறுநீர் கழிக்க ஒரே ஒரு துவாரம் வைத்துவிட்டு மீதி உறுப்பு மூடப்பட்டுவிட்டது. என் கன்னித் தன்மையும், ஒரு இனத்தின் கௌவமும் காப்பாற்றப்பட்டுவிட்டது. இதற்கு, நான் செத்துப்போய் இருக்கலாம்.

தையல் முடிந்ததும் கிழவி போய்விட்டாள். நான் எழுந்திருக்க முயன்றேன். என்னால் அசையக்கூட முடியவில்லை. என் இரண்டு கால்களும் துணிப்பட்டையால் சுற்றப்பட்டிருந்தன. அம்மா என்னை நகர்த்தியதும் பாறையைத் திரும்பிப் பார்த்தேன்.

ஒரு கோழியை வெட்டி, மீதியை விட்டிருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இரத்தச் சகதியோடு இருந்தது பாறை. என் பிறப்புறுப்பின் உணர்ச்சிமிக்க பாகங்கள் வெயிலில் காய்ந்துகொண்டிருந்தன.

(தொடரும்)

# ஊரும் உலகமும்

## விவியனின் காதல் திருமணம்


விவியன் குணவர்த்தன


விவியன் குணவர்த்தன தனது மாமன்களான பிலிப் குணவர்த்தனவினதும் றொபேட் குணவர்த்தனவினதும் அரசியலால் கவரப்பட்டு இளம் வயதிலேயே லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்தார். சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் ஆற்றிய ஆக்ரோசமான உரைகளுக்காகச் சிங்கள இனவாதிகள் இவரைச் சிங்கள மீனாட்சி என்று அழைத்தனர்.

சமசமாஜக் கட்சியில் இணைந்துகொண்ட விவியனுக்கு அக் கட்சியின் தலைமைக் குழுவைச் சேர்ந்த இளம் பரிஸ்டரான லெஸ்லி குணவர்த்தனவுடன் காதல் ஏற்பட்டது. உயர் சாதியான கொய்கம சாதியைச் சேர்ந்த தனது மகள் குறைந்த சாதியான கராவ சாதியைச் சேர்ந்த ஒருவரைக் காதலிப்பதை விவியனின் தந்தை டாக்டர் குணதிலகவால் சீரணிக்க முடியவில்லை. அந்தக் காதலைத் தடுப்பதற்கு அவர் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்ததால் வெளியே செல்ல முடியாதவாறு விவியனை வீட்டுக்குள் பூட்டி வைத்தார்.

தனது காதலியைத் தன்னிடம் ஒப்படைக்கக் கோரி வெஸ்லி குணவர்த்தன மாவட்ட நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்தார். தனது மகள் மோசமான ஒரு கட்சியைச் சேர்ந்த ஒருவரைக் காதலிப்பதாலேயே அக் காதலை எதிர்ப்பதாக டாக்டர் குணதிலக நீதிமன்றத்தில் கூறினார். தானும் அதே கட்சியின் உறுப்பினர் என்றும் காதலனுடன் செல்ல விரும்புவதாகவும் விவியன் கூறினார். விவியனின் விருப்பத்துக்குத் தந்தை தடையாக இருக்கக்கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விவியனும் லெஸ்லியும் 1939 ஜனவரி மாதத்தில் திருமணம் செய்தனர். இந்த வழக்கில் லெஸ்லிக்காக ஆஜராகியவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன.

## சர்வதேச நீதிமன்றம் அமெரிக்காவுக்கு கண்டனம்



நிக்கரகுவா அரசாங்கத்துக்கு எதிராகப் போராடிய கொன்ட்ரா அமைப்புக்கு அமெரிக்கா நேரடியாக ஆயுத உதவியும் நிதியுதவியும் வழங்கி வந்தது. இதை ஆட்சேபித்து நிக்கரகுவா அரசாங்கம் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. கொன்ட்ரா அமைப்புக்கு அமெரிக்கா வழங்கும் உதவி சர்வதேச சட்டங்களையும் வழமையான நடத்தை முறைகளையும் மாத்திரமன்றி இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாமை என்ற கோட்பாட்டையும் அந்நாட்டின் இறைமையையும் மீறுவதாக உள்ளது என்று 1986 ஜூன் மாதத்தில் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கொன்ட்ரா அமைப்புக்கு வழங்கும் உதவிகளை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்ற இத் தீர்ப்பின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றியது.

## முதலாவது நாடாளுமன்றத்தில் பெண் உறுப்பினர்கள்


குசுமா குணவர்த்தன

முதலாவது நாடாளுமன்றத்தில் புளொறென்ஸ் சேனநாயக, குசுமா குணவர்த்தன, தமராகுமாரி இலங்கரத்ன ஆகிய மூன்று பெண் உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுள் புளொறென்ஸ் சேனநாயக லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளராக நாடாளுமன்றத் தேர்தலில் கிரியெல்ல தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். மற்றைய இருவரும் இடைத் தேர்தல்கள் மூலம் சபைக்கு வந்தவர்கள்.

அவிசாவளைத் தொகுதியில் வெற்றி பெற்ற பிலிப் குணவர்த்தன தேர்தல் வழக்கில் பதவியிழந்ததால் அவரது மனைவி குசுமா இடைத் தேர்தலில் போட்டியின்றித் தெரிவாகினார். கண்டித் தொகுதியில் வெற்றி பெற்ற ரீ.பீ.இலங்கரத்ன தேர்தல் வழக்கில் பதவியிழந்ததால் அவரது மனைவி தமராகுமாரி இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

# கல்விப் புலத்தில் மணமணம் பரப்பி தடம்பதிக்கும் யா/நாவற்குழி மகா வித்தியாலயம்



அதிபர்
**திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம்**
*BA, Din in Edu, S.L.P.S -1,S.L.E.A.S; -111*

### அறிமுகம்

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 60 பாடசாலைகளில் யா/நாவற்குழி மகா வித்தியாலயமும் ஒன்றாகும். இப் பாடசாலை தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை (கலை, வர்த்தகப் பிரிவு உட்பட) வகுப்புக்களைக் கொண்ட 1C பாடசாலையாகக் காணப்படுகின்றது. இங்கு நாவற்குழிப் பிரதேச மாணவர்கள் மட்டுமன்றி கோவிலாக்கண்டி, தச்சன்தோப்பு, கைதடி நாவற்குழி, மறவன்புலவு ஆகிய கிராம மாணவர்களும் கல்வி கற்கின்றனர். தற்போது 672 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இவர்களது கல்விப் பசியைத் தீர்க்க 38 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர்.

### கற்றல் கற்பித்தல் செயற்பாடு

### தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் பரீட்சையில் 2010இல் செல்வன்.ச.நிதர்சன் 2013இல் செல்வி. சி.கதிர்விழி, செல்வி. பு.கஜானா, செல்வி. வி.சுவேதா 2014 இல் செல்வி. ஜெ.அபிநயா, செல்வன். ஜீ. பகீஷன், செல்வன். இ.சங்கீதன், செல்வன். ந. சஞ்ஜய் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

| வருடம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 45 | 51 | 42 | 44 | 55 |
| தகுதிபெற்றோர் | 01 | - | - | 03 | 04 |
| தகுதிபெற்றோர் வீதம் | 02% | 00% | 00% | 07% | 07% |
| 100 இற்குமேல் புள்ளிபெற்றோர் | 12 | 12 | 05 | 10 | 20 |
| 100 இற்குமேல் புள்ளிபெற்றோர் வீதம் | 27% | 24% | 11% | 23% | 36% |
| 70 இற்குமேல் புள்ளிபெற்றோர் | 30 | 26 | 21 | 31 | 35 |
| 70 இற்குமேல் புள்ளிபெற்றோர் வீதம் | 67% | 51% | 50% | 70% | 64% |

### க.பொ.த (சா/த) பரீட்சை

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கடந்த வருடம் செல்வி ஜதுர்ஷனா ஜெனார்த்தன் 6A, B,2C பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

| பாடம் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 85 | 93 | 94 | 83 | 84 |
| கிறிஸ்தவசமயம் | 100 | 60 | 100 | 100 | 89 |
| கிறிஸ்தவமல்லாதது | - | 100 | - | - | - |
| தமிழ் மொழி | 81 | 60 | 68 | 58 | 63 |
| ஆங்கிலம் | 16 | 11 | 15 | 08 | 17 |
| விஞ்ஞானம் | 33 | 35 | 46 | 36 | 30 |
| கணிதம் | 40 | 32 | 44 | 31 | 33 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 49 | 53 | 63 | 41 | 70 |
| வணிகமும் கணக்கீடும் | 75 | 67 | 100 | 50 | 75 |
| புவியியல் | - | 89 | 88 | 100 | 100 |
| குடியுரிமைக்கல்வி | 56 | 51 | 67 | 57 | 74 |
| சங்கீதம் | 70 | 96 | 84 | 100 | 100 |
| சித்திரம் | 17 | 06 | 50 | 22 | 10 |
| நடனம் | 100 | 80 | 100 | 100 | 100 |
| தமிழ் இலக்கியம் | - | 00 | - | - | - |
| ICT | 40 | - | 100 | 100 | 50 |
| விவசாயம் | 55 | 100 | | 57 | 50 |
| மனைப்பொருளியல் | 43 | 67 | 62 | 42 | - |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 92 | 79 | 86 | 71 | 92 |
| கடல்நீர்வளம் | - | 38 | - | - | - |
| க.பொ.த(உ/த) தகுதிபெற்றோர் | 37 | 30 | 44 | 28 | 33 |

### க.பொ.த (உ/த) பரீட்சை

க.பொ.த உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவு 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு முதன் முறையாக கடந்த வருடமே பரீட்சைக்குத் தோற்றி '3A' தர சித்திகளைப் பெற்ற திருச்செல்வம் புஸ்பரூபன் மாவட்ட மட்டத்தில் 44ஆவது நிலையைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார்.


| பாடங்கள் | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| பொருளியல் | - | - | 00 | 100 | 57 |
| வணிகக்கல்வி | - | - | - | - | 75 |
| கணக்கியல் | - | - | - | - | 75 |
| தமிழ் | 100 | 67 | 38 | 94 | 100 |
| இந்துநாகரிகம் | 100 | 100 | 100 | 100 | 87 |
| அரசியல் | - | - | - | 78 | 33 |
| சங்கீதம் | 100 | - | 100 | 100 | 100 |
| புவியியல் | 90 | 67 | 50 | 100 | 57 |
| கிறிஸ்தவநாகரிகம் | - | - | 100 | 100 | - |
| அளவையியல் | 50 | - | 50 | - | - |
| பொதுஆங்கிலம் | 00 | 00 | 00 | 00 | 04 |
| பொதுஅறிவு | 58 | 00 | 25 | 06 | 33 |
| பல்கலைக்கழகஅனுமதி | 83 | 67 | 25 | 81 | 44 |

### இணைப் பாடவிதான உயர் உன்னதங்கள்

1992ஆம் ஆண்டு 'இளந்தளிர்' எனும் பாடசாலைச் சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. 2005 இல் மழலைகளின் மகிழ்வுறு கற்றலுக்காக நாவற்குழியூர் நடராஜனின் பெயரினால் அவரது மகன் மகிழ்னன் நடராஜனினால் சிறுவர் பூங்கா கட்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
2007ஆம் ஆண்டு UNICEF நிறுவனத்தால் பிள்ளைநேயப் பாடசாலைகளின் உயர் ஆற்றுகைக்குரியதாக இனங்காணப்பட்டு 'A'தரச் சான்றிதழும் கேடயமும் வழங்கப்பட்டது.
2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'அகமலர்' என்ற அகஞ்சார் மாதாந்த சஞ்சிகை வெளியிடப்பட்டது, யூன் மாதம் கணனி அலகு திறந்து வைக்கப்பட்டது.
2009ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 'மனச்சிறப்பங்கள்' எனும் தலைப்பில் பாடசாலைப் பிள்ளைகளினால் பாடல் இறுவட்டு வே.சந்திரகுமார் ஆசிரியரின் வழிகாட்டலோடு வெளியிடப்பட்டது.
2014இல் தென்மோடிக் கூத்து

(மிகுதி 13ஆம் பக்கம்)

**தரம் 5 புலமைப்பரிசில் 2014**



**இதயகுமார் சங்கீதன்**



**நந்தகுமார் சஞ்ஜய்**




**ஜீவகரன் பரீசன்**



**ஜனார்த்தன் அபிநயா**



**ஜெ.ஒல்லியாடிலக்சினி**
சிங்களப் போட்டி
மாகாண மட்டம் 2ஆம் இடம்



**சுப்பிரமணியம் சுபாஸன்**
கணித வினாடி வினாப்போட்டி
ஒலிம்பியாட் போட்டி
3ஆம் இடம் தேசியமட்டம்
1ஆம் இடம் மாகாணமட்டம்



**சோபனா ஜெயச்சந்திரன்**
சிறுகதை ஆக்கம்
தேசிய மட்டம் 1ஆம் இடம் 2014



**விஜயகுமார் சுவேதா**
சமூக விஞ்ஞானப் போட்டி
மாகாணமட்டம் 2ஆம் இடம் 2014



அதிபர், ஆசிரியர்கள்

## கல்விப்புலத்தில்...

வலயத்தில் 1ஆம் இடமும் மாகாணத்தில் 3ஆம் இடமும் பெற்றுக் கொண்டது. கணித வினாடிவினாப் போட்டியில் செல்வன் சுப்பிரமணியம் சுபாசன் வலயத்தில் 1ஆம் இடமும் மாகாணத்தில் 1ஆம் இடமும் தேசியத்தில் 3ஆம் இடமும் பெற்று பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார்.

சமூக விஞ்ஞானப் போட்டியில் செல்வி சுவேதா விஜயகுமார் மாகாண மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றுக்கொண்டார்.

தமிழ்த்தின சிறுகதையாக்கப் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ஆம் இடத்தை செல்வி சோபனா ஜெயச்சந்திரன் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

சிங்கள வாசிப்புப் போட்டியில் செல்வி ஒல்லியா டிலக்சினி ஜெயச்சந்திரன் மாகாணத்தில் 2ஆம் இடமும் தேசியத்தில் சான்றிதழும் பெற்றுக்கொண்டார். ஒப்பந்த அடிப்படையில் சிங்கள பாட ஆசிரியர் ஒருவர் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

2015இல் ஒலிம்பியாட் போட்டியில் செல்வன் சுப்பிரமணியம் சுபாசன் வலயத்தில் 1ஆம் இடமும் மாகாணத்தில் 2ஆம் இடமும் தேசியத்தில் பங்குபற்றியும் உள்ளார்.

| விளையாட்டு | 2014 | | 2015 |
|---|---|---|---|
| உதைபந்தாட்டம் | 17 வயது ஆண் | வலயம் 1ஆம் இடம் | வலயம் 1ஆம் இடம் |
| உதைபந்தாட்டம் | 19 வயது பெண் | வலயம் 2ஆம் இடம் | வலயம் 1ஆம் இடம் |
| உதைபந்தாட்டம் | 19 வயது ஆண் | வலயம் 2ஆம் இடம் | வலயம் 1ஆம் இடம் |
| துடுப்பாட்டம் | 19 வயது ஆண் | வலயம் 3ஆம் இடம் | |

2014 இல் வலய மட்டத்தில் தடகளப் போட்டிகளில் 17 வெற்றிவாய்ப்புக்கள் பெறப்பட்டுள்ளன. இதில செல்வி ஜோ.ஜெயசீலி, செல்வி ஜே.ஜெயசாளினி, செல்வி அ.றெபேக்கா ஆகிய மூவரும் முதன்மை வீராங்கனைகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

2015 இல் கோட்ட மட்டத்தில் 57 இடங்களையும், வலய மட்டத்தில் 16 இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

**கற்றல்வள நிலையப் போட்டி**

1C பாடசாலைகளுக்கிடையிலான கற்றல்வள நிலைய மாகாணமட்டப் போட்டியில் 2013இல் 2ஆம் இடமும் 2014இல் 1ஆம் இடமும் பெற்று விருதும் சான்றிதழும் பெற்றுக் கொண்டது.



01.09.2012 இல் கனடா வாழ் பழைய மாணவர்களால் கனடாவில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது...

**கண்காட்சி**

கற்றல்வள நிலையத்தால் 'ஆக்கி மகிழ்வோம்' எனும் பெயரில் 20 தலைப்புக்களில் ஒவ்வோர் துறை சார்ந்த கண்காட்சி 24.06.2014 இல் நடாத்தப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கமைய ஏனைய பாடசாலைகளும் பார்த்து பயன் பெறும் பொருட்டு 25.06.2014 வரை நீடிக்கப்பட்டது. இக்கண்காட்சி தேர்தல் முறையில் நடாத்தப்பட்டு பத்திரிகைகளின் பாராட்டையும் பெற்றுக் கொண்டது. பிற பாடசாலைகள் தரிசித்துப் பயன்பெறும் இடமாகவும் கற்றல்வள நிலையம் காணப்படுகின்றது.

**வெளியீடு**

'நேர்கோடுகள் என்றும் வளைவதில்லை' எனும் தலைப்பில் செல்வி சோபனா ஜெயச்சந்திரனின் சிறுகதைத் தொகுதி 2015 மார்ச் மாதம் கற்றல்வள நிலையத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

**விஞ்ஞான ஆய்வு கூடம்**

கற்றல் கற்பித்தலுக்கு மிகவும் ஏற்றமுறையில் விஞ்ஞான ஆய்வுகூடம் காட்சியளிக்கின்றது. தென்பகுதி பாடசாலையான கொ/வத்தளை சென். ஆன்ஸ் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் வருகை தந்து பாராட்டி சென்றுள்ளனர். மீண்டும் 26.05.2015இல் பாடசாலை மாணவர்களுடன் இணைந்து வருகை தர இருப்பது குறிப்பிடத்தக்கது.



தென்மோடிக் கூத்து மாகாணமட்டம் 3ஆம் இடம் 2014

# நூல் வெளியீடு

வவுனியா தமிழ்ச்சங்கமும் ஒட்டுசுட்டான் செந்தணல் வெளியீட்டகமும் இணைந்து நடாத்தும் செல்வி எஸ்.வேதிகாவின் 'கண்ணாடிப் பூக்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் செயலாளர், தமிழறிஞர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சிறப்பு விருந்தினர்களாக 'படைப்பாளிகள் உலகம்' அமைப்பின் தலைவர் த.ஐங்கரனும் தமிழ் எப்.எம் வானொலி அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தனும் கலந்துகொள்வர். வரவேற்புரையினை நெடுங்கேணி பிரதேச செயலாளர் க.பரந்தாமனும் வாழ்த்துரையினை வவுனியா தமிழ்ச்சங்கத்தின் தலைவர் எஸ்.என். ஜி.நாதனும் நிகழ்த்துவர். தலைமையுரையினைத் தொடர்ந்து தொடக்கவுரையினை வவுனியா கல்வியியற் கல்லூரியின் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஆர்.பார்த்திபனும் சிறப்புரையினை 'ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள்' எனும் பொருளில் மூத்த எழுத்தாளர் தமிழ்மணி க.க.அருந்தவராஜா (மேழிக்குமரன்)வும் அறிமுகவுரையினையும் வெளியீட்டுரையினையும் செந்தணல் வெளியீட்டக நிறுவுநர், காவியப் பிரதீபா வன்னியூர் செந்தூரனும் வழங்குவர். நூல் வெளியீட்டினைத் தொடர்ந்து முதல்,சிறப்புப்பிரதிகள் வழங்கப்படும். நூல் விமர்சன உரையினை குரும்பையூர் த.ஐங்கரன் நிகழ்த்துவார்.

சிறப்பு விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நூலாசிரியர் நிகழ்த்துவார். நிகழ்ச்சி ஒழுங்கமைப்பினை கனகராயன் குளம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் மேற் கொண்டுள்ளது.

(125)

# பதிவிறக்கப் பெட்டகம்

பொதுவான விதிகள் சாத்தியமில்லை. எல்லாச் சட்டங்களும் (Systems) மதம் சார்ந்த – சாராத அறிவியல் மதிப்பீடுகளுடன் ஒரு குறிப்பான குழுவுக்காக உருவாக்கப்பட்டு பின்னர் எல்லோருக்குமாக பொதுமைப்படுத்தப்பட்டவையே.

– பிரெட்றிக் நீட்சே

இன்றைய அரசியல் சூழலை எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய ஆபத்து பாசிசம். இது வித்தியாசங்களை மறுக்கிறது. ஒரு குறிப்பிட்ட வகையான மொழியையும் ஒரு குறிப்பிட்ட வகையிலான சிந்தனை முறையையும் மட்டுமே நிறுவனப்படுத்துவதில் அது வெற்றி கண்டு வருகிறது. புதிய புதிய பெருங்கதையாடல்களைக் கட்டமைக்கிறது. தனது பேச்சு முறையை, சொல்லாடல்களை மட்டுமே அதிகாரபூர்வமானதாகவும் முழுமையான மேலாதிக்கம் செய்யத்தக்கதாகவும் அது நிறுவிவிடுகிறது. இதன் மூலம் வித்தியாசத்தை வலியுறுத்தும் மற்றமையை அது வெளியேற்றுகிறது. அழித்தொழிக்கிறது. – அ.மார்க்ஸ்

வித்தியாசமான வாழ்க்கைமுறை என்பது வித்தியாசமான மதிப்பீடுகளை, உறவுகளை, சிந்தனைகளை, அடையாளங்களை, நினைவுகளை உருவாக்கி விடுகிறது. பின் இந்த அடையாளங்களையே அடிப்படையாக்கி சாராம்சப் பண்புகளை வரையறுக்கின்றன ஆதிக்க சக்திகள். சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்த இத்தகைய சாராம்ச வரையறைகளை பயன்படுத்துகின்றன. பாசிசம் இத்தகைய சாராம்சப் பண்புகளை கோட்பாட்டுருவாக்கம் செய்கிறது. எதிரி, நாம் என்பதெல்லாம் இந்த அடிப்படையில் கண்டுபிடிக்கப்படுகின்றன; கற்பிதம் செய்யப்படுகின்றன. கலாசாரம், மரபு, இனம், மொழி.... எல்லாமே இவ்வாறு கற்பிதம் செய்யப்பட்டவைதான் என்பதை பாசிசத்தை எதிர்ப்பவர்கள் நினைவில் கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்?

ஆம். வித்தியாசங்கள் சாராம்ச ரீதியானவை என்பது பாசிசம்; வித்தியாசங்கள் வரலாற்று ரீதியானவை என்கிறோம் நாம்.

வித்தியாசங்களை – சிறு அடையாளங்களை அங்கீகரித்தல், சாராம்ச – அடிப்படை வாதங்களின் ஆபத்துக்களை உணர்தல், பெருங்கதையாடல்களின் வன்முறைகளைப் பற்றிய பிரக்ஞை கொண்டிருத்தல் என்கிற அம்சங்கள் இன்றைய பாசிசச் சூழலை எதிர்கொள்ளப் பயன்படும் என்று நாங்கள் நினைக்கிறோம், அவ்வளவுதான்! – பிரேம் ரமேஷ்

பாசிசத்துக்கான வெகுமக்கள் ஆதரவு ஏன் என்பதற்கு காரணம் இருக்கிறது. பாசிசம் மனித மனத்தில் அறிவை (reason) அழித்து உணர்வையே (emotion) அதிகம் பிர தானப்படுத்துகிறது.

– டெரிடா

தேசியம், மதம், இனம், சாதி போன்றவற்றுக்கான ஒற்றுமை பற்றிப் பேசுகிற குரல்கள் அதற்கு வெளியே நிற்பவர்களை துரோகிகளாகவே கருதும். அவர்களுக்கு வாழ்வதற்குத் தகுதியில்லை என்பதே அவற்றின் அந்தரங்கத்திலுள்ள தீர்ப்பாகவும் இருக்கும். அவ்வாறு சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களை முட்டாள்களாக, அசுத்தமானவர்களாக, ஏமாற்றுக்காரர்களாக, குற்றவாளிகளாக சித்தரித்துக் காட்டும்.

– கண்காணிப்பின் அரசியல்

எல்லா விதமான தேசிய, மத, கோட்பாட்டுப் பொய்களையும், உலகின் மக்கள் தங்கள் உணர்வுகளிலிருந்து நீக்க வேண்டும். இது எனது சொந்தக் கருத்து அல்ல. பல்வேறு பார்வைகளை ஆய்வு செய்து, சரித்திரத்துடன் பொருத்திப் பார்ப்பதன் விளைவு என்பதைக் குறிப்பிட வேண்டும். முதலாவதாக, சரித்திரத்தில் எங்குமே பிரிவினைச் சக்திகள் சுபிட்சத்தைச் சாதித்ததில்லை. சுபிட்சம் இயற்கையாகச் சம்பவித்த தருணங்களில கூட, அதை நிர்மூலமாக்கிய பிரிவினைகள் நிலவியுள்ளன. மத ரீதியான கட்டுக்கோப்புக்களைப் பூர்வீக சமூகங்கள் மேற்கொண்ட போது, அந்தச் சமூகங்களின் பிரிவினையற்ற கூட்டியக்கம்தான் சுபிட்சத்தைச் சாதித்துள்ளது. விஞ்ஞானபூர்வமான முறைகளாக உணவுற்பத்தி பிறந்த ஆரம்ப காலங்களின் சாதனை அது. மக்களைப் பிணித்து ஒரு கூட்டியக்கத்தைச் சாதிக்க ஒருசமயம் உதவிய அதே நம்பிக்கை, தனது உபரியான நிலையை விட முக்கியத்துவம் பெற்றுவிடும் போது, அது உடனடியாகப் பேராபத்திற்கும் அழிவுக்கும் வழிவகுத்துள்ளது. இது சரித்திரம்.

– தருமு சிவராமு

வேறு எந்தக் காரணத்தாலும் பிழைக்க முடியாதவர்களும், ஒழுக்கமும் நாணயமும் அற்றவர்களும், மக்களை ஏமாற்றி வாழும் மோசக்காரர்களும் கடைசியாய்ப் போய் அடைக்கலம் புகுவதற்கு இன்று தேசிய வியாபாரத்தை விடச் சுலபமான வழி வேறு ஒன்றும் இல்லை.

– ஈ.வெ.ராமசாமி (1935 'குடியரசு' தலையங்கத்தில்)

# அமைதியைக் குலைக்கும் ஆர்ப்பாட்டம் விசாரணையை தாமதப்படுத்தலாம்

## சபாவாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

புங்குடுதீவு மாணவியின் படுகொலையில் ஈடுபட்ட பாதகர்களை கடவுள் கூட மன்னிக்க மாட்டார். இந்தக் கொடூரமான ஈனச் செயலில் ஈடுபட்டவர் களுடைய தண்டனையை விரைவுபடுத்தக்கோரி நடாத்தப்படும் போராட்டங்கள் விசாரணைகளை காலதாமதப்படுத்தவும் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அமையாது அமைதியாகவும் ஒற்றுமைப்பட்டதாகவும் அமைவதை மக்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். என சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ சபாவாசுதேவக்குருக்கள் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனஅமைதியிழந்து நிற்கும் இவ்வேளையில் அமைதியைக் குலைத்து அசாதாரண சூழலை ஏற்படுத்தி தமக்கு சாதகமாகப் பயன்படுத்த முற்படுபவர்களும் உள்ள வேளையில் மக்கள் தமது போராட்டங்களை சாத்வீகமானமுறையில் காத்திரமாக முன்னெடுத்து போராடுதல் அவசியமாகும்.

கல்வியாலும் ஒழுக்கத்தினாலும் தலைநிமிர்ந்து நிற்கும் எமது மண் கலாசாரத்தினை சிதைவடையச்செய்யும் வகையில் ஈடுபட்ட கொடூரவாதிகளுக்குரிய தண்டனையை சட்டம் விரைவுபடுத்துவதன் மூலம் மக்களை மன அமைதியடையச் செய்யவும் ஆறதல் படுத்தவும் முடியும்.

எனவே சட்டம் சிறிதேனும் காலதாமதம் இல்லாமல் விரைவாக தண்டனையை அறிவித்து தர்மத்தினை நிலைநாட்டி அமரத்துவமான மாணவியின் ஆத்மா சாந்தியடையச்செய்வதோடு பெண்களுக்கான பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தவும் நீதி தேவதையை வேண்டுகின்றோம். ஆலயங்களில் மக்கள் தொடர் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம்.

# மகிந்த தேர்தலில் போட்டியிட்டால் விசேட சலுகைகள் கிடைக்கும்

## என்கிறார் அனுரபிரியதர்சன யாப்பா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட்டால் விசேட சலுகைகள் வழங்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட்டால், நேர்முகத் தேர்வு நடாத்தப்படமாட்டாது.

வேட்பு மனு வழங்குவதற்கான விசேட குழு முன்னிலையில் பிரசன்னமாகாது மகிந்தவிற்கு வேட்பு மனு வழங்கப்படும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து வேட்பாளர்களும் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுவர், வேட்பாளர்களாக போட்டியிட விரும்புவோர் வேட்பு மனுக்களை பரிசீலனை செய்யும் விசேட குழுவின் முன்னிலையில், நேர்முகத் தேர்விற்காக பிரசன்னமாக வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட விரும்பினால் அதற்கு எவ்வித தடையும் கிடையாது என ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார் என அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

# சாரணர் இயக்கத்தின் தலைவராக ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைமைப் பதவிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சாரணர் இயக்கத்தின் தலைவர் மற்றும் ஆலோசகர் பதவி ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், இலங்கை சாரணர் சங்கம் ஜனாதிபதிக்கு இந்த பதவிகளை வழங்கியுள்ளது.

சாரணர் இயக்கத்தின் யாப்பிற்கு அமைய நாட்டுத் தலைவரே அந்த இயக்கத்தின் தலைவராகவும் கடமையாற்றுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சாரணர் இயக்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியுடன், சாரணர் இயக்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

# மத்திய வங்கி ஆளுநர் எந்த நாட்டுப் பிரஜை

## கேட்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் எந்த நாட்டுப் பிரஜை என்பதனை அரசாங்கம் அம்பலப்படுத்த வேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் தொடர்ந்தும் சிங்கப்பூர் பிரஜையா அல்லது இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டதா என்பதனை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் எவ்வாறு இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகிக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் நிதிக் கொள்கைகளை அமுல்படுத்தும் முக்கிய நிறுவனமாக மத்திய வங்கி திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டுப் பிரஜையொருவர் நாட்டின் நாணயத்தாளில் கையொப்பமிடுவதாகத் தெரிவித்துள்ளார். அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை என்றால் அவர் எவ்வாறு நாணயத்தாள்களில் கையொப்பத்தை இட முடியும் என அவர் 'கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாட்டுப் பிரஜை ஒருவரிடம் எவ்வாறு ஒப்படைக்க முடியும் என முன்னாள் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.




கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை




பூநகரி மத்திய கல்லூரி

புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் முல்லை கோட்டைகட்டிய குளம் அ.த.க.பாடசாலை. கிளி.பூநகரி மத்திய கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.

51.கிழங்குகளையும் தண்டுகளையும் நடுவதன் மூலம் புதிய தாவரத்தை பெற்றுக்கொள்ள முடிவது?
1)மரவள்ளி 2)இஞ்சி 3)வற்றாளை 4)பசளி

52.பின்வரும் வித்துக்களில் எண்ணெய் தயாரிக்கக்கூடிய வித்து?
1)கோப்பி 2)தனக்கு 3)ஆமணக்கு 4)கடுக்காய்

53.வடமாகாணத்திற்குரிய மாவட்டங்கள் முறையே
1)வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை 2)மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை
3)மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா 4)யாழ்ப்பாணம், அம்பாறை, பொத்துவில்

54.விற்றமின் D அடங்கியது பின்வருவனவற்றுள் எது?
1)தேங்காய்எண்ணெய் 2)நல்லெண்ணெய் 3)விளக்கெண்ணெய் 4)மீனெண்ணெய்

55.வெடித்து பரம்பலுக்கு உட்படும் வித்துக்கள் முறையே
1)இறப்பர்,காசித்தும்பை 2)பொன்னொச்சி, மகோகனி
3)பருத்தி,இலுப்பை 4)கடலமாங்காய்,பேராமுட்டி

56.பல்லி முட்டையின் நிறம் என்ன?
1)மஞ்சள் 2)வெள்ளை 3)கறுப்பு 4)கபிலம்

57.வீட்டுத்தோட்டத்திற்கு பாதகத்தை ஏற்படுத்தும் விலங்கு
1)தேனீ 2)கும்பிடுபூச்சி 3)இலைப்பூச்சி 4)மரவட்டை

58.பந்தலில் வளர்க்கக்கூடிய பயிர்கள் எவை?
1)கரும்பு, மூங்கில், கௌப்பி 2)பாகல், புடோல், வெற்றிலை
3)தக்காளி, வெள்ளரி, பூசணி 4)பீர்க்கு, போஞ்சி, மிளகு

59. 
இக்குறியீட்டினால் குறிக்கப்படுவது எது?
1)சுயாதீன தொலைக்காட்சி சேவை
2)இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
3)இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம்
4)தபால் சேவை திணைக்களம்

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01)01.பதறி 02.சிறந்த 03.உருமாறினான் 04.பருந்து 05.இறந்தகாலம்
06.சக்கரவர்த்தி (02)07.நிறைவேறியிட்டது 08.உயர்வானது/ மேன்மையானது 09.ஆடு மாடுகள்
(03)10.தரப்பட்டுள்ளன 11.எனது 12.வந்துள்ளோம் (04)13.நான் காலையில் எழுந்தேன், நான் பாடலை மனனம் செய்தேன் 14.நாம் முயற்சி செய்வோம், நாம் வெற்றி காண்போம்
(05)15.கண்டனர் 16.பாடின 17.பறவைகள் (06)18.பலத்த 19.உயர்ந்த 20.சிறந்த
21.சாதுவான (07)22.கலை 23.பாம் 24.படி 25.ஒடு (08)26.Bring your book
(09)27.நான் எனது நாட்டை நேசிக்கின்றேன் (10)28.r 29.e 30.i (11)31.அம்மா உயலா இவரய்த? (12)32.அம்மா தண்ணீர் கொண்டு வந்தார் (13)33 - 35 வரை விரும்பிய வசனம்
(14)36.1.3050g 2.10100g 37.1.1L 800ml 2.3மணி 30நிமிடம் 38.145.00
39.1.8,6 2.8,4 40.200ml 41.2015 42.75 (15)43.25
44.20ஐ குறித்து காட்டவும் 45.25 46.120 47.20020 (16)48.3 49.4
50.2 51.4 52.2 55.4 56.3 57.1 58.3 59.1 60.3 61.1 62.2 63.1
64.2

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 4 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

உண்பதற்குப் பலவிதமான பழங்கள் பருகுவதற்குப் பால் என்றாலும் இவை எதிலுமே எனக்கு நாட்டம் ஏற்படவில்லை சின்னச்சின்ன மழைத்துளிகளில் நனைய எனக்கு மிகவும் விருப்பம். அத்துளிகளில் நனைந்தபடி பறந்து செல்லும் போது மழைத்துளிபட்டுச் சிரிக்கும் மரங்களையும் கண்டு இரசிப்பேன். உங்களைப் போன்ற குழந்தைகளும் மழையில் ஆனந்தத்தோடு நனைந்து மகிழ்வதையும் நான் கண்டு அனுபவிப்பதுண்டு

01.கவலையோடு என்ற சொல்லுக்கான எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக
..............................................................................................

02.இப்பந்தியில் இடம்பெறும் ஒத்தகருத்துள்ள சொற்கள் இரண்டை எழுதுக ..............................

03.பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை எழுதுக ..............................

04.இப் பந்தியில் இடம்பெற்றுள்ள தன்மை ஒருமைப் பெயர்ச்சொல்லை எழுதுக ..............................

05.பறந்து என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க்குறியை எழுதுக ..............................

06.கூண்டுக்கிளியின் ஆசை என்ன? ..............................

(02)கீழே தரப்பட்டுள்ளவாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

07.நத்தை ஓட்டுக்குள் ..............................(ஒளிந்து, ஒழிந்து) கொண்டது

08.புகைவண்டியில் ..............................(மின்விசிரியை, மின்விசிறியை) காணவில்லை

09.தலைக்கு ..............................(சிகைக்காய், சீயாக்காய்) தேய்த்துக் குளிப்பது உடலுக்கு நல்லது

(03)பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக

10.பத்திரிகைகள் வாசிப்பதால் எமது பொதுஅறிவு வளர்ச்சி அடைகின்றன ( )

11.நாம் கல்விச்சுற்றுலா சென்ற வேளை அங்கு போயிருந்தேன் ( )

(04)பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

12.பரதன் பரிவாரத்துடன இராமன் இருந்த வனத்தை நோக்கிப் புறப்பட்டான் ..............................

13.கோசலை பரதனை ஆறுதல் கூறி ஆசீர்வதித்து அனுப்பினாள் ..............................

14.அயலார்கள் அழுக்காறு கொள்ளார்கள். இதில் அழுக்காறு என்பது? ..............................

(05)வெற்றிடங்களை நிரப்புக

15.சோலைக்குயிலே சாய்ந்தாடு
.............................. சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
..............................

16.பலவும் படித்து நீங்கள்
..............................
உலகத்தோடும் ஒத்தே
..............................

(06)பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக

**(07)** வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

18. விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் .......................... (இங்கிலாந்தில், அமெரிக்காவில்) மிலான் நகரில் பிறந்தார்

19. மழையைப் பெறுவதற்கு மனிதனுக்கு .......................... (ஆறுகள், காடுகள்) அவசியமாகின்றன

20. சாதாரண கூட்டல்பொறி ஒன்று .......................... (கொற்பிறிட், பிளெஸ் பஸ்கால்) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது

**(08)** பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக

21. Let's draw the National flag ..........................

22. please look at the picture ..........................

**(09)** பின்வரும் ஆங்கிலச்சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக

23. prin.........ipal 24. Libr.........ry 25. b.......cycle

**(10)** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக

26. எனக்குத் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள் ..........................

**(11)** பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக

27. அத் இஹலட்ட ஓசவன்ன ..........................

**(12)** தனிச்சொல்லைத் தருக

28. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை ..........................

29. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் ..........................

30. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா ..........................

**(13)** பெற்றோர் எனும் சொல்லின்

31. திணை? .......................... எண்? .......................... இடம் .......................... பால்?
.......................... என்பவற்றைக் குறிப்பிடுக

**(14)** நகர வாழ்க்கையை விட கிராம வாழ்க்கைச் சூழல் மிகவும் அமைதியானது. கிராமச் சூழலில் இயற்கைக்காட்சிகள் நிறைந்து காணப்படுகின்றன. அந்த வகையில் நீங்கள் இரசித்து மகிழ்ந்த கிராமமொன்றின் அழகினை மூன்று வாக்கியங்களில் எடுத்துக்கூறுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் எழுத்துக்கூட்டலும் இலக்கணத்தொடர்பும் சரியாக அமைய வேண்டும்

32. ..........................

33. ..........................


34. ..........................

**(15)** வினாக்களுக்கான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

35. தீர்க்க 1) XX + IV ÷ IV = ..........................

36. கூட்டுக 0.5 + 3.5 + 0.3 + 0.2 + = ..........................


37. கண்டியில் இருந்து ஒருவர் பயணத்தை ஆரம்பித்து ஏனைய மூன்று இடங்களுக்கும் செல்லக்கூடிய குறைந்தளவு தூரம் எத்தனை கிலோமீற்றராகும்?
.......................... ....






38. 250கிராம் தேயிலையும் 500கிராம் சீனியும் வாங்குவதற்கு ரூபா 175.00 செலவாகும் எனின் 750கிராம் தேயிலையும் 1 1/2 கிலோகிராம் சீனியும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவையாகும்? ..........................


39. விரித்து வைக்கப்பட்ட ஒரு திருக்குறளில் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினது எண்களை முறையே எழுதுக ..........................


40. 
ஒரு சென்ரிமீற்றர் இடைவெளியில் ஆணி அறையப்பட்ட பலகை அருகில் காட்டப்பட்டுள்ளது. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சென்ரிமீற்றராகும்?
..........................

41. சித்ராவின் வயது 16 வருடங்களும் 9 மாதங்களுமாகும். அவளது தங்கையின் வயது 12 வருடங்களும் 8 மாதங்களுமாகும் எனின் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகையை வருடங்களிலும் மாதங்களிலும் தருக? வருடம் .......................... மாதம் ..........................

42. பேருந்து வண்டி ஒன்று மணிக்கு 40km வேகத்தில் செல்லும் அது மாறா வேகத்தில் 140km தூரத்தை சென்றடைவதற்கு எடுக்கும் நேரத்தைக் குறிப்பிடுக .......................... மணி ..........................


43. கலைநிகழ்ச்சி ஒன்று மு.ப 11.30 மணிக்கு ஆரம்பித்து தொடர்ந்து 2மணித்தியாலங்கள் 30நிமிடங்கள் நடைபெற்றதெனின் கலைநிகழ்ச்சி முடிவுற்ற நேரத்தை பின்வரும் இலக்கக்கடிகாரத்தில் குறிக்க




44. 
இவ்வுருவில் $\frac{1}{10}$ பங்கு நெல்லிக்கனிகள் விற்கப்பட்டது. அதில் மேலும் $\frac{3}{5}$ பங்கு நெல்லிக்கனிகள் விற்பனை செய்யப்பட்டன. எனின் விற்கப்பட்ட மொத்த நெல்லிக்கனிகளின் பங்கை நிழற்றிக்காட்டுக

45. 3 லீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் 725 மில்லிலீற்றர் அளவான 3 மில்லிலீற்றர் போத்தல்களில் இடும்போது எஞ்சியிருக்கும் பானத்தின் அளவு யாது? ..........................

46. உருவின் சுற்றளவு யாது? ..........................




47. 

உருவில் செங்கோணத்தைக் காட்டும் எழுத்தை குறிப்பிடுக? ..........................

**(16)** மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

48. SLS, ISO ஆகிய தரச்சான்றுகளை வழங்கும் அதிகாரம் பெற்ற நிறுவனம் எது?
1) இலங்கை மத்திய வங்கி 2) இலங்கை கட்டளைகள் பணியகம்
3) இலங்கை மத்திய அரசு 4) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்

49. இலங்கை நாட்டுக்குரித்தான பிராணி எது?
1) நீர்க்கணவாய் 2) மீன்கொத்தி 3) குக்குறுவான் 4) கஸ்தூரிமான்

50. இலங்கை நாட்டுக்குரித்தான தாவரம் பின்வருவனவற்றுள் எது?
1) பனை 2) இறப்பர்
3) தென்னை 4) பச்சைக்கொறுக்காய்

# வித்தியா படுகொலை விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம்

(கொழும்பு)

புங்குடுதீவில் பாடசாலை மாணவி வித்தியா கூட்டு வன் புணர்வுக்குப் பின்னர் படு கொலை செய்யப்பட்டது தொடர் பான விசாரணையை, குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப் பேற்றுள்ளது.

வித்தியா படுகொலை விவ காரம், யாழ்ப்பாணத்தில் பெரும் அமைதியின்மையை ஏற்படுத் தியுள்ள நிலையிலும், வடக்கு கிழக்கு மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் அதற்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்றுள்ள நிலையிலும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து, இந்த விசாரணை குற்றப்புலனாய் வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள் ளது.

இந்த விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்புப்பிரிவு ஒன்று யாழ்ப் பாணம் அனுப்பப்பட்டுள்ளதாக, பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விசார ணையை தனிப்பட்ட வகை யில் மேற்பார்வை செய்யவும், நேற்று முன்தினம் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக ஆரா யவும், பொலிஸ் மா அதிபர் இலங்ககோனும் யாழ்ப்பாணம் சென்றுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு புதிய ஒழுக்க கோவை

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களுக் கான ஒழுக்க விழுமியங்கள் நேற்று (வியாழக்கிழமை) முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, பொது நிர்வாகம் மற்றும் சுதேச விவகார அமைச்சு தெரிவித்துள் ளது.

இது தொடர்பான சுற்றுநிரு பம் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜி.தடல் லகே குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் இந்த ஒழுக்க விழுமியங்களை நடை முறைப்படுத்தவுள்ளதாக அமைச் சின் செயலாளர் மேலும் கூறி யுள்ளார். ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான மேலதிக தகவல் களை அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

# அச்சத்துடன் அமெரிக்காவில் வாழும் இலங்கை யுவதி

(கொழும்பு)

தாம், தமது குடும்பத்தில் இருந்து தப்பிச்சென்று 6 வரு டங்களாகியும் இன்னும் அச்சத் துடன் வாழ்வதாக அமெரிக் காவில் வசிக்கும் இலங்கை வம்சாவளி மாணவி தெரிவித் துள்ளார்.

அவர் எழுதியுள்ள புதிய நூலில் இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது.

ரிப்கா பாரி என்ற இந்த மாணவி, பெற்றோருடன் குடி பெயர்ந்து அமெரிக்கா ஒஹியோ வில் வசித்து வந்தார்.

இந்தநிலையில் வீட்டில் இருந்து வெளியேறி கிறிஸ்தவ மதத்துக்கு மாறினார்.

இதனையடுத்து தமக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதாக மாணவி புதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாம் எடுத்த தீர் மானம் குறித்து கவலைப்பட வில்லை என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

8 வயதாக இருக்கும் போது ரிப்காவின் இடதுகண்ணில் விளை யாட்டு விமானம் ஒன்றுபட்டதன் காரணமாக அவர் இடது கண் பார்வையை இழந்தார்.

இதன்பின்னர் 12 வயதில் அவர் வீட்டில் இருந்து வெளி யேறி கிறிஸ்தவ மதத்தை தழுவிக்கொண்டார்.

தற்போது 22 வயதாகியும் இன னும் பயத்துடனேயே வாழ்வதாக ரிப்கா குறிப்பிட்டுள்ளார்.

# கைவிடப்பட்ட சிசு கிளிநொச்சியில் மீட்பு

(கொழும்பு)

கிளிநொச்சி புகையிரத நிலைய வீதிக்கு அருகிலுள்ள ஒற்றையடிப் பாதையில் இருந்து பிறந்து 24 மணித்தியாலங்களே யான பெண் சிசு நேற்று முன் தினம் புதன்கிழமை மீட்கப்பட் டுள்ளதாக கிளிநொச்சி பொலி ஸார் தெரிவித்தனர்.

சிறுவன் ஒருவன் ஒற்றை யடிப் பாதையில் பெண் சிசு கிடப்பதை அவதானித்து, அதனை மீட்டு தனது மேற் சட்டையை அந்த சிசுவுக்கு அணிவித்து அதனை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றுள் ளான்.

சிசுவைப் பெற்றுக்கொண்ட பொலிஸார், சிசுவை கண் டெடுத்த இடத்தை சிறுவனைக் கொண்டு அடையாளப்படுத்தினர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவில் சிசு தற்போது ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணையை மேற்கொண்டு, சிசுவைக் கைவிட்ட தாயைத் தேடி வருவதாக பொலிஸார் கூறினர்.

# எவரும், எப்பதவியிலிருந்தும் விலகுவதற்கு தடை இல்லை

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

எவருக்கும் தான் வகிக்கும் எந்தவொரு பதவியில் இருந்தும் இராஜினாமா செய்ய முடியும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் ஜீ பெரேரா தெரிவித் துள்ளார்.

நான்கு அமைச்சர்களின் பதவி விலகலானது அவர்கள் இந்த அரசாங்கத்தின் பங்கு தாரர்கள் இல்லை என்பதையே காட்டுவ தாகவும் அவர் கூறி யுள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பொன்றில் வினவப பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அல்லது அதன் உறுப்பினர் களின் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிட தனக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள் ளார். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி முழு மனதுடன் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வுடன் இருக்கும் எனவும் பிரதி வெளிவிவகார அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

# கடையில் மீட்கப்பட்ட ஆவணங்கள் முக்கியமானவை

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொறளை நகரிலுள்ள பழைய போத்தல் விற்பனை நிலையத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஆவணங்கள் மிக முக்கியமானவை என்று ஜனா திபதி செயலகம் தெரிவித் துள்ளது.

இந்த தகவலை ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி தம்மிக்க நவரத்ன தெரிவித்தார்.

இவை வெறும் 320 ரூபா விற்கு விற்பனை செய்யப்பட் டுள்ளதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

பொலிஸாரின் விசாரணை யின் பின்னர் குறித்த ஆவ ணங்கள் அனைத்தையும் கையளிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.








வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
..............................
பெற்றோர் கையொப்பம்


# முரசின் இன்றைய பலன்

(22.05.2015 வெள்ளிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 08 ஆம் திகதி.
சித்த யோகம். சதுர்த்தி திதி.
புனர்பூச நட்சத்திரம் பி.இ 12.40 வரை. பின் பூசம்.
இராகுகாலம் 10.22-11.52 வரை சுபநேரம் 05.52-07.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வீதி ஒழுங்கினை மீறியதால் தண்டம் கிடைத்தல்.

**ரிஷபம்**
வெளியீடுகளில் ஆர்வம் கொள்ள முயற்சிகளில் ஈடுபடல்.

**மிதுனம்**
தடைகள் விலக கிரக சாந்தி கள் செய்ய விழைதல்.

**கடகம்**
உணவுக்கட்டுப்பாட்டினை மேற் கொள்ள திட சங்கற்பம் பூணல்.

**சிம்மம்**
சேமிப்பில் நாட்டமும், அநாவசிய செலவினங்களைக் கைவிடவும் விரும்புதல்.

**கன்னி**
பரீட்சைச்சித்தியினால் உயர் பதவிகிட்டும்நம்பிக்கை பிறத்தல்.

**துலாம்**
ஏழரைச் சனி இருப்பதினால் பயண முயற்சியை கைவிட்டு விட எண்ணமிடல்.

**விருச்சிகம்**
பாதுகாப்பில் கூடிய கவனம் எடுப்பதினால் திருடர் தொல்லை விலகுதல்.

**தனுசு**
மௌனம் கலக நாஸ்தி எனக் கொண்டதால் முரண்பாடு விலகிவிடல்.

**மகரம்**
புத்திரர்களினால் நிம்மதியும் மன அமைதியும் கெட்டு விடல்.

**கும்பம்**
கொடுக்கல் வாங்கல் சம்பந்த மாக மாமனுடன் தகராறு ஏற் பட்டு விடாமல் சமயோசிதமாக நடக்கத் தலைப்படுங்கள்.

**மீனம்**
அசையும், அசையாச் சொத்துக் களினால் பிரச்சினைகள் தக் கவைத்தல்.

# ஜெயலலிதாவின் பதவியேற்பு

# ஏற்பாடுகள் தடல், புடல்



அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா நாளை முதலமைச்சராக பதவியேற்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ள சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு அரங்கம் இதற்கென தயாராகி வருகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை கர்நாடக உயர்நீதிமன்றம் விடுவித்ததை அடுத்து, இன்று கட்சியின் சட்டசபை உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொள்வதோடு, தலைவர்களின் சிலைகளுக்கு மரியாதை செலுத்தவுள்ளதாக அறிவித்துள்ளார். இது அ.தி.மு.க தொண்டர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பதவியேற்பு நிகழ்ச்சி சென்னை பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு கட்டடத்தில் நடைபெறும் என செய்திகள் வெளியான நிலையில், தற்போது அங்கு ஆயத்தப் பணிகள் இரவு பகலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 217 நாட்கள் கழித்து மீண்டும் தொண்டர்களை சந்திக்க வரும் ஜெயலலிதாவை வரவேற்க வித்தியாசமான பதாதைகளுடன் தொண்டர்கள் தயாராகி வருகின்றனர்.

மேலும், ஜெயலலிதா வசிக்கும் போயஸ்கார்டன் பகுதியில் இருந்து அவர் செல்லக்கூடிய ராதாகிருஷ்ணன் சாலை, காமராஜர் சாலை போன்ற சாலைகளை சீரமைக்கும் பணிகளும், அவற்றின் நடுவே பூச்செடிகளை நடும் பணிகளும் இரவு பகலாக நடைபெற்று வருகின்றன.

உலகச் செய்திகள்

# பரசிட்ட மோல் பாவனை கர்ப்பிணிகளுக்கு ஆபத்து



கர்ப்பகாலத்தில் தாய்மார் அதிகமான பரசிட்டமோலை உட்கொண்டால், அது அவர்களது பிறக்கப்போகும் மகனின் இனப்பெருக்க சக்தியை பாதித்துவிடும் என்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

வலி நிவாரணியாக பலராலும் பயன்படுத்தப்படும் பரசிட்டமோல் எலிகளில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆராயும் விஞ்ஞானிகளே இதனைத் தெரிவித்துள்ளனர்.


எலிகளில் மனிதக் கருவின் திசுக்களை செலுத்தி, ஒரு கர்ப்பம் போன்று பாவனை செய்து பரிசோதித்தபோது, பரசிட்டமோல் 7 நாட்களுக்கு கொடுக்கப்பட்டவற்றுக்கு, அதில் டெஸ்ட்துரோனின் அளவு மிகவும் குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆண்களுக்கான இனப்பெருக்க உறுப்புக்களை உருவாக்குவதில் இந்த ஹார்மோன் முக்கிய பங்காற்றுகிறது.

கர்ப்பிணிகள் இந்த வலி நிவாரணியை மிகவும் அவசியமாக தேவைப்பட்டால் மாத்திரம், மட்டுப்படுத்தப்பட்ட காலத்துக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும் என்று பிரிட்டனின் சுகாதாரத் துறை கூறுகிறது.

# காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தான் கொடி

## அதிர்ச்சியில் இந்தியா



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினைவாதிகள் மீண்டும் பாகிஸ்தான் கொடியேந்தி பேரணி நடாத்தியிருப்பது இந்தியத முழுவதும அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இந்திய காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதா அரசு காஷ்மீரை பாகிஸ்தானுக்கு தாரை வார்க்க நினைப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்நிலையில் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பாரதீய ஜனதா அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் பிரிவினைவாத அமைப்பு சார்பில் நடாத்தப்பட்ட பேரணியில பிரிவினைவாத தலைவர் மிர்வாஸ் கலந்து கொண்ட போது பேரணியில் பங்கேற்ற பலர் பாகிஸ்தான் கொடியை அசைத்து முழக்கமிட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பிரிவினைவாதிகள் மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது இந்திய ஒருமைப்பாடை சீர்குலைக்கும் செயல் என காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.இன் பிடியில் சிரிய பல்மைரா நகரம்

## ஆபத்தில் வரலாற்றுச் சின்னங்கள்



சிரியாவின் பழமையான நகரமான பல்மைராவின் முழுக் கட்டுப்பாட்டையும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தம் வசப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் பல்மைரா பகுதியில் கடுமையான மோதல் இடம்பெற்றதைத் தொடர்ந்தே ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பல்மைரா நக்ரை கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் மிகவும் புராதனமான வரலாற்றுச் சின்னங்களைக் கொண்ட பல்மைரா நகரத்தில் தற்போது இடம்பெற்ற இந்த மோதலில் பல புராதன கட்டடங்கள் சேதமடைந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் அண்மைக்காலமாக ஈராக் மற்றும் சிரியாவில் காணப்படும் புராதன நகரங்களை கைப்பற்றும் நடவடிக்கையில் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார வளர்ச்சியில் சீனாவை முந்தும் இந்தியா

## ஐ.நா. அறிக்கையில் கணிப்பு

நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சியில், சீனாவை இந்தியா முந்தும் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு 2015ஆம், 2016 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.6 சதவிகிதமாக இருக்கும் எனவும் சீனாவின் வளர்ச்சி 7 சதவிகிதமாக மட்டுமே இருக்கும் எனவும் ஐ.நாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வளர்ச்சியானது தெற்காசிய பொருளாதார வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமையும் எனவும் ஐ.நா. ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளவில் ஒட்டுமொத்தமாக பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 2.8 சதவிகிதமாக மட்டுமே இருக்க வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏமன் உள்நாட்டுப்போர் 1850பேர் உயிரிழப்பு



ஏமன் நாட்டில் நடந்து வரும் உள்நாட்டுப்போரால் 1850 பேர் பலியாகியுள்ளதாக ஐ.நா. சபை தகவல் வெளியிட்டுள்ளது.

ஏமனில் ஜனாதிபதி ஹாதிக்கு எதிராக, ஹவுத்திஸ் கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடாத்திவந்தார்கள். இந் நிலையில் அது உள்நாட்டு போராக மாறியது. கிளர்ச்சியாளர்களுக்கும் ஈரான் மறைமுகமாக ஆயுத உதவி செய்ததைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் உச்சக்கட்டம் அடைந்தது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஹாதி, சவுதி அரேபியாவிற்கு சென்று உதவியை நாடினார். ஜனாதிபதி ஹாதிக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும், அதன் நட்பு நாடுகளும் தலையிட்டு கிளர்ச்சியாளர்கள் மீது போர் புரிந்து வருகின்றன.

இந் நிலையில், கடந்த மார்ச் மாதம் முதல் நடைபெற்று வரும் இந்த தாக்குதலில், தற்போது ஐ.நா. தலையிட்டதால் 5 நாள் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் உள்நாட்டுப் போர் தொடங்கிய கடந்த மார்ச் மாதம் முதல் ஏமனில் 1850 பேர் பலியாகி உள்ளதாகவும். 7,349 பேர் காயம் அடைந்துள்ளதாகவும், மேலும் 5 இலட்சம் பேர் ஏமனில இருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளதாகவும் ஐ.நா. சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ.எஸ்.ஐ.எஸ்.இல் இணைவு கனடாவில் 10 பேர் கைது

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைவதற்காக கனடாவில் உள்ள மான்டிரையல்ஸ் டுருடியு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஈராக் மற்றும் சிரியாவிற்குச் செல்ல முயன்ற 10 வாலிபர்களை கனடா பொலிஸார் அதிரடியாக பிடித்து கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து ரோயல் கனடா மவுண்டேட் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில், கைது செய்யப்பட்ட வாலிபர்களிடம் இருந்த கடவுச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. தொடர்ந்து அவரகளிடம் விசாரணை நடந்து வருகிறது என்று தெரிவித்தனர்.

## 13 ஆவது திருத்தம்

சர்வதேச சமூகம் பிரதானமாக அமெரிக்கா மற்றும் இந்தியா என்பனதான் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை பெற்றுத் தரும் என நம்புவது போல உள்ளது. ரி.என்.ஏ தலைவர்கள் தங்கள் பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக புதிய அரசாங்கத்துடன் பேசாமல் ஏன் இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச நபர்களுடன் பேசுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா ஊக்குவிப்பது, மனிதாபிமான அக்கறைகள் ஒரு பங்கினை வகித்தாலும், முக்கியமாக மூலோபாய காரணங்களுக்காகத்தான் என்பது வெகு தெளிவு. சில ரி.என்.ஏ தலைவர்கள் உட்பட சில தமிழர்கள் மனித உரிமைகள் மீறலுக்காக இலங்கையை அமெரிக்கா தண்டிக்கும் என நினைத்தார்கள். இது தவறாக வைக்கப்பட்ட ஒரு நம்பிக்கை. புதிய அரசாங்கம் இந்தியா மற்றும் மேற்கு என்பனவற்றுடன் ஒத்துழைக்க விருப்பமுள்ளதாக விளக்கியதிலிருந்து, இந்த இரண்டு நாடுகளும் இலங்கை அரசாங்கத்துடன் வெகு நெருக்கமாக வேலை செய்யப் போகின்றன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க ராஜாங்க செயலர் ஜோண் கெரி ஆகியோர் இலங்கைக்கு மேற்கொண்ட வருகைகள் நிச்சயமாக சர்வதேச சமூகம் தங்களைக் காப்பாற்றி தங்களைப் பாதுகாக்கும் என நம்பிக்கை வைத்திருந்த தமிழர்களுக்கு ஒரு பின்னடைவே ஆகும்.

எனவே தமிழ்க்கட்சிகள் சர்வதேச உதவிகளுக்கு மாறாக உள்ளக நடவடிக்கைகளுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டியதற்கு இதுவே மிகவும் அவசியமான நேரம்.



மண்டைதீவு சாம்பலோடை அருள்மிகு கண்ணகி அம்மன் தேவஸ்தான ஏககுண்ட மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனத்தின்போது எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வின்போது... (5௧)

# இரகசிய தடுப்பு முகாம் விவகாரம் நாடாளுமன்றில் காரசாரம்





நாட்டில் பல்வேறு இடங்களில் இரகசிய முகாம்கள் இருப்பதாகவும், அதில் பலர் தடுத்து வைத்திருப்பதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தொடர்ந்து கூறிவந்த நிலையில், இவ் விடயம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.) யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபோது யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் வைத்து நேரடியாகக் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், அவ்வாறு எதுவும் இல்லை எனத் தெரிவித்தமை ஏற்கனவே அறிந்த விடயமாகும். எனினும், இதன் பின்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரகசிய முகாம்கள் உண்டெனவும், இதற்கான ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதெனவும் கூறிவந்தனர்.

இந்நிலையில், டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் இவ் விடயம் தொடர்பில் பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அதில், நாட்டில் இரகசியத் தடுப்பு முகாம்கள் ஏதேனும உள்ளனவா? அவ்வாறாயின் அவை எத்தனை? அவை எங்கெங்கே உளளன? அவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விபரங்கள் யாவை? இவற்றை வெளிப்படுத தவும் போன்ற விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தன.

இதற்கு இரண்டு வார கால அவகாசம் கோரப் பட்டிருந்த நிலை யில், நாடாளுமன்றத்தில் பதிலளித்துள்ள பிரதமர், அவ்வாறான இரகசியத் தடுப்பு முகாம்கள் இல்லை எனத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறான முகாம்கள் இருப்பதாகக் கூறுகிறார்களே என டக்ளஸ தேவானந்தா கேட்டபோது, அப்படி எதுவும் இல்லை என பிரதமர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

மேலும், காணாமற் போனவர்களது உறவினர்கள் தங்களது உறவுகளைத் தேடி கதறி அழுகின்ற பரிதாபக் காட்சிகளைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தபோது, இதனை ஆராய்வதற்காக குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# கொலையாளிகளுக்கு புகலிடம் கொடுத்தது யார்?

## புதிய கோணத்தில் விசாரணை

புங்குடுதீவு பிரதேசத்தில் உயர்தர வகுப்பு மாணவி வித்தியா வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

விஷேட விசாரணைகளுக்காக நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவின், கடத்தல் மற்றும் மனிதப் படுகொலைகள் தொடர்பில் விசாரணை செய்யும் சிறப்பு குழுவொன்று யாழ்.புங் குடுதீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர், சட்டத்தரணி ருவன் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் பேச்சாளர் தொடர்ந்து குறிப்பிடுகையில், மாணவி வித்தியா, பலாத்காரம் செய்யப்பட்டமை, படுகொலை செய்யப்பட்டமை ஆகிய விடயங்களுடன் சந்தேக நபர்கள் குறித்த பின்னணி தொடர்பாகவும் இந்த குழு விசாரணை செய்யப்படவுள்ளது. அதனைவிட எவரேனும் சந்தேக நபர்களை காப்பாற்ற முனைந்தனரா, அவர்களுக்கு தெரிந்துகொண்டே அடைக்கலம் கொடுத்தனாரா உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உள்ளடங்கியதாக பரந்துபட்ட வகையில் இந்த விசாரணை அமையும் என்றார்.

## மணல்...

யாழ். மாவட்டத்தின் கட்டடத் தேவைகள் மற்றும் வீடமைப்பு திட்டங்குளுக்க கூட மணலை பெற முடியாத நிலைமை காணப்படுவதாகவும் இதனால் பலர் தொழில் இழந்து இருக்கின்றனர் எனத் தெரிவித்து பிரேரணை ஒன்றை முன்வைத்தார். இதற்குப் பதிலளித்து முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கும்போது - எதிர்காலத்தில் பொது மக்களின் மணல் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் தேவைக்கு ஏற்ப மணலை பெறும் வகையிலும் மணலை பொதி செய்து விற்பனை செய்வது சம்பந்தமாக யோசனைகளை மேற்கொண்டு வருகிறார் என தெரிவித்துள்ளார்.

## ரகளை...

பேரை, எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிவான் உத்தரவிட்டார். யாழ். சிறைச்சாலையில் பெருமளவானோரைத் தடுத்து வைக்க இடமில்லாததால், இவர்கள் அனுராதபுர சிறைச் சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## முடங்கியது...

லகங்களும் மூடப்பட்டுள் ளன. இதனால் வவுனியா மாவட்டம் முற்றாக செயலிழந்துள்ளது.

அதேவேளை, ஆங்காங்கே கண்டனப் பேரணிகளும் நடத்தப்பட்டன. வவுனியா நகரில், கண்டனப் பேரணி நடத்த முற்பட்ட போது, பொலிஸார் எச்சரித்து பொதுமக்களைக் கலைத்தனர்.

இதனால் வவுனியா நகரப்பகுதியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. இதற்கிடையே வித்தியா கொலைக்கு கண்டனம் தெரிவித்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பிலும் நேற்று போராட்டங்கள் பல இடம்பெற்றுள்ளன.

## கலகம்...

அங்கிருந்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தை சென்றடைந்து அங்கு பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றினை கையளித்து கலைந்து சென்றனர்.

மாணவியின் கொலையுடன் தொடர்புடையதாக முன்னதாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த பொலிசார் முயற்சிகளை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

## சட்டத்தரணிகள்...

யாழ். நீதிமன்ற கட்டடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சட்டத்தரணிகள் இவ்வாறு கூறினர். நீதிமன்றத்துக்குள் உட்புகுந்து குழப்பம் விளைவித்த குழுவொன்று நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்ததுடன் நீதிமன்ற கட்டடக் கண்ணாடிகள் மற்றும் வாகனங்களின் கண்ணாடிகளையும் சேதமாக்கினர். இது ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

இதனைக் கண்டித்து, இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுக்கு வருந்துகின்றோம் என யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (25)

## அரசு...

ணமாக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவித்த பதவி விலகிய முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தினார்.

அதேவேளை டிலான் பெரேரா, பவித்ரா வன்னியாராச்சி, மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் சீ.பி.ரத்நாயக்க ஆகியோர் நேற்று எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மஹிந்த ராஜபக்ஷ இனத்தின் தந்தை என இங்கு கருத்து வெளியிட்ட டிலான் பெரேரா, அவர் பிரதமராக போவதில்லை என தீர்மானித்துள்ளதாகவும், அவர் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்க ஜனாதிபதி தடையாக இருக்க மாட்டார் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இங்கு கருத்து வெளியிட்ட மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழமையாக கிடைக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி இன்னும் கிடைக்கவில்லை எனக் கூறினார்.

தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கச்சார்பாக செயற்படுவதாகவும், தற்போது சுதந்திரக் கட்சியினர் வேறு வழியின்றி அவமதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பிரதேச சபைகளைக் கலைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் எனினும் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் எனவும் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மேலும் கூறினார்.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்தில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளதாகவும், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பிக்குகள் உள்ளிட்ட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சட்டம்...

நடைபெற்ற புங்குடுதீவைச் சேர்ந்த உயர்தர மாணவி செல்வி. சி. வித்தியாவின் படுகொலை, அதிகரித்து வரும் வாள் வெட்டுச் சம்பவங்கள், குற்றவியல் செயற்பாடுகள், பல இடங்களிலும், குறிப்பாகப் பாடசாலைகளிற்கு அண்மையிலும் சுலபமாகக் கிடைக்கும் போதைப் பொருட்கள், கலாசார சீர்கேடுகள் போன்றவை தொடர்பாகத் தினமும் எம் மக்கள் மத்தியில் பயத்தினையும், பீதியினையும் ஏற்படுத்தி வருகின்றன.

இது தொடர்பாக தங்களால் கடந்த 17.05.2015 இல் வெளியிடப்பட்ட ஊடகங்களிற்கான அறிக்கையில் பொலிசாரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளும் குற்றங்கள் இழைக்க ஏதுவாக அமைந்து விடுகின்றன் என்றும், இப்பேர்ப்பட்ட கரிசனையில்லாத் தன்மை, முன் கருதலற்ற கூற்றுக்கள், தாமதங்கள் ஆகியன மேலும் மேலும் குற்றங்கள் புரிய ஏதுவாக அமைவன என்பதை அதிகாரத்தில் உள்ள யாவரும் உணர வேண்டும் என்றும், போதைப் பொருட் பாவனை திட்டமிட்டே மாணவர் சமுதாயத்திடையே அறிமுகப் படுத்தப்படுகின்றதா? என்று எண்ண வேண்டியுள்ளது என்றும் கூறியிருக்கின்றீர்கள்.

மேலும் பொலிஸ் அதிகாரங்கள் சம்பந்தமாக மாகாண சபை அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டவையே என்பது யாவரும் அறிந்தது. எனினும் மக்களின் நலம் நோக்கி எமக்கு புரிந்துணர்வும், ஒற்றுமையும் இருந்தாற்தான் சமுதாய சீரழிப்பாளர்களை வெற்றி கொள்ளலாம் என்றும் கூறியிருக்கின்றீர்கள்.

தங்களது இக் கூற்றுக்களை வரவேற்கின்ற அதேவேளை பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பாக மாகாண சபைக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களே உள்ளன என்பதற்காக நாம் அறிக்கைகளை மட்டும் வெளியிட்டுவிட்டு இருக்கமுடியாது. இக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டும். அத்துடன் அதிகரித்துவரும் சாலை விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்னோடியாக சட்டம், ஒழுங்குக்குமான அமைச்சர் என்ற வகையிலும் முதலமைச்சர் என்ற வகையிலும் உடனடியாகத் தங்கள் தலைமையில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர், மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள் உள்ளடங்கலான ஒரு கூட்டத்தைஒழுங்கு செய்யுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது.

அத்துடன் இக் கோரிக்கையினை எதிர்க்கட்சித் தலைவர் நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வின் போதும் முதலமைச்சரிடம் அவசர வேண்டுகோளாக விடுத்துள்ளார்.

# ரணிலுடன் வாசு சொற்போர் நாடாளுமன்றத்தில் நேற்று





(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கிளப்பியபோது ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களுக்கு இடையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தகாத வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்தியமையினால் சபையில் பெரும் குழப்ப நிலை தோன்றியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிக் கொண்டிருந்தபோது குறிக்கீடு செய்து ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பினார்.

இதன்போது அவரை அமரும்படி பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இதனால் கோபமுற்ற வாசுதேவ நாணயக்கார, தன்னை எவராலும் அமரப்பண்ண முடியாது, ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக்கூட எழுப்ப இடங்கொடுக்கப்படாவிட்டால் நாடாளுமன்றம் எதற்கு என்று மிகுந்த ஆத்திரத்துடன் கருத்துக்களை வெளியிட்டார்.

இதனிடையே பிரதமருக்கும், வாசுதேவ நாணயக்காரவிற்கும் இடையில் வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றுவந்த சந்தர்ப்பத்தில், பைத்தியக்காரரைப் போன்று செயற்பட வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

அத்துடன் தகாத வார்த்தைகளால் பிரதமரை திட்டிய வாசுதேவ நாணயக்கார மிகுந்த கோபத்துடன் அமர்ந்தார்.

# பிரித்தானியத் தூதுவர் சம்பந்தனுடன் பேச்சு



(கொழும்பு)

இலங்கைக்கான பிரித்தானியாவின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள ஜேம்ஸ் டௌரிஸ் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகள் மற்றும் அபிலாசைகள் குறித்து பேச்சு நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் பிரித்தானியாவின் புதிய தூதுவராகப் பொறுப்பேற்ற ஜேம்ஸ் டௌரிஸ், முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் பௌத்த பீடாதிபதிகள் உள்ளிட்டோரை சந்தித்திருந்தார்.

# தாதியர்கள் போராட்டம் முல்லைத்தீவில் நேற்று

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் தலைமைத் தாதியர்களின் இடமாற்றம் தொடர்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டமானது முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் கடந்த 9 வருடங்களாகப் பணி புரிந்து வரும் தலைமை தாதியர்கள் நால்வரை ஒட்டிசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு பணி மாற்றம் செய்யப்படுவதனைக் கண் டித்தே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின்போது மாஞ்சோலை வைத்தியசாலையில் பணி புரியும் 64 தாதியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமது வைத்தியசாலையில் உள்ள தலைமைத் தாதியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமாயின் அதற்கு தகுந்த தலைமைத் தாதியர்களை பணியில் நியமிக்க வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (125)

## பயணிகள் பேருந்து மீது தாக்குதல்

திருகோணமலையிலிருந்து யாழிற்கு புறப்பட்ட பயணிகள் பேருந்தின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றைய தினம் 5 மணியளவில் புறப்பட்ட மேற்படி பேருந்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பேருந்தின் சாரதி உட்பட மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். அதனைத் தொடர்ந்து 6 மணியளவில் பயணித்த மற்றுமொரு பேருந்தின் மீது தாக்குதுல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இத்தாக்குதலின்போது பேருந்தின் கண்ணாடிக்ள் உடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




பாலியல் வன்புணர்விற்குப் பின் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின்போது....

# முள்ளந்தண்டு பாதிப்புற்றோருக்கு கொடுப்பனவு வழங்க புதிய படிவம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு புதிய வகைப் படிவம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர்களால் இப் படிவம் தகுதியான பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இப் படிவமானது 3 பக்கங்களைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு பயனாளிக்கும் தனித்தனியான தொடர் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இடுப்பிற்கு கீழாக பாதிக்கப்பட்டோர், கழுத்திற்கு கீழாக பாதிக்கப்பட்டோர் என விபரங்கள் கேட்கப்பட்டு அரச மருத்துவரின் சிபாரிசும் பெறப்படல் வேண்டும்.

சென்ற மாதம் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு வவுனியாவில் வைத்து வட மாகாண சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பின்பு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ளவர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,மன்னார், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாத இறுதி முதல் கொடுப்பனவு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏப்ரல் மாத நிலுவையுடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது.

மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதாந்தம் வழங்கப்படும் 3000 ரூபா கொடுப்பனவைப் பெறுபவர்களும் இந்த கொடுப்பனவை பெற முடியும்.

இடுப்பிற்கு கீழ் பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்தம் 1500 ரூபாவும், கழுத்திற்கு கீழே பாதிக்கப்பட்டோருக்கு மாந்தம் 3000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

# வடமாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவு செய்யப்படவில்லை

## ஒப்புக்கொள்கிறார் முதலமைச்சர்

கடந்த ஆண்டிற்கென வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி இன்னும் முழுமையாக செலவு செய்யப்படவில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றுக்கு வடக்கு முதல்வர் பதிலளித்துள்ளார். இது தொடர்பாக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசாவினால் நேற்று சபை அமர்வில் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

30.12.2014 இல் நடைபெற்ற அமைச்சரவை வாரியக் கூட்ட அறிக்கையின் படி நாற்பத்தொரு கோடியே பதினாறு இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியுள்ள 03 வேலைத்திட்டங்களிற்கான மாற்று வேலைத்திட்டங்களிற்கும், இருபத்தேழு கோடியே தொண்ணூறு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நாநூற்று எழுபத்து மூன்று ரூபா இருபத்து நான்கு சதத்திற்கான 125 வேலைத்திட்டங்களிற்கும் மார்ச் 2015ஆம் ஆண்டு வரை 2014ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கீட்டில் இருந்து செய்து முடிப்பதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், 31.03.2015ஆம் திகதிக்குள் குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் யாவும் முற்றாக செய்து முடிக்கப்பட்டுள்ளதா? என எதிர்க்கட்சித் தலைவரால் கேட்கப்பட்ட வினா விற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் யாவும் 31.03.2015இற்கு முன்னர் முடிவுறுத்தப்பட ஏற்பாடாக இருந்த போதிலும், எதிர்பாராத காலநிலைகள் மற்றும் பிற காரணிகளின் தாக்கங்களினால் இவ் வேலைகள் செய்து முடிக்கப்படவில்லையென்று பதிலளித்துள்ளார். (இ)

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.